
TO SHARE THE LIGHT

# தீபகச் சுடர்

ஜூன் 2024

தீபம் 13 சுடர் 01

தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.



## தூயதொரு இதயம்

## கொடு... கொண்டாடு...

# தீபகத்திலிருந்து **இறையாசீர்**

*தீபக வாசகர்களுக்கு, திருஇருதய ஆண்டவர் விழா வாழ்த்துக்கள்!*



**"திருஇருதய ஆண்டவர்"** விழாவைப் பற்றிய மறைக்கல்வி நமக்கு என்ன சொல்கிறது என்று சிந்திப்போம். ஜூன் மாதம் நாம் கொண்டாடும் திருஇருதய ஆண்டவர் **"விழா"** என்பதை, நாம் திருவழிபாட்டின் வழியாக சிந்திக்க வேண்டும்.

தூய ஆவியின் பெருவிழாவிற்கு பிறகு வரும் மூன்று ஞாயிற்றுக்கிழமைகளும் மூன்று முக்கியமான பெருவிழாக்களைக் கொண்டாடுகிறது. **1. மூவொரு கடவுள் பெருவிழா 2. இயேசுவின் திருவுடல் திருஇரத்தப் பெருவிழா 3. திரு இருதய ஆண்டவர் பெருவிழா.** இவை யாவும் ஒன்றையொன்று சார்ந்து இருக்கக்கூடியவை. திருத்தந்தை 16ம் ஆசிர்வாதப்பர் இந்த மூன்று முக்கிய திருவழிபாட்டு மறைநிகழ்வுகள் பற்றி கூறும்போது **"கிறிஸ்தவ வாழ்வின் நம்பிக்கை மறைப்பொருளை இவ்விழாக்கள் இரத்தினச் சுருக்கமாக விளக்குகிறது"** என்று கூறுகிறார். அதாவது மூவொரு கடவுள் பற்றிய உண்மை, நற்கருணை என்னும் அருட்சாதனம், இயேசு "கடவுளும் மனிதனுமானவர்" என்கின்ற முப்பெரும் விழாக்கள் கிறிஸ்துவ நம்பிக்கையின் மறைப்பொருளும், மையப்பொருளுமாகும்.

எல்லா திருவழிபாட்டு நிகழ்ச்சிகளும், குறிப்பாக, திருவருகைக் காலம் முதல் தூய ஆவியானவரின் விழாவரை கொண்டாடுகின்ற எல்லாத் திருநிகழ்வுகளிலும் **"கடவுள் நம்மோடு மிக நெருக்கமாக இருக்கின்றார்"** என்பதை நினைவுப்படுத்துகிறது. மூவொரு கடவுள் பெருவிழாவில் **"யார்"** நம்மோடு இருக்கின்றார் எனவும், அவர் தந்தை, மகன், தூய ஆவியாராக இருக்கின்றார் எனவும், கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தம் விழாவில் **"ஏன்"** கடவுள் நம்மோடு நற்கருணையில் இருக்கின்றார் எனவும், திருஇருதய ஆண்டவர் விழாவில் **"எப்படி"** நம்மோடு இருக்கின்றார் எனவும், குறிப்பாக அவர் நம்மேல் வைத்திருக்கின்ற அளவில்லா அன்பினால் எனவும், நாம் அறிந்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் பல வண்ணமயமான திருவழிபாட்டு ஆடைகளை அணிந்துக்கொண்டு, இந்த முப்பெரும் விழாக்களை சிறப்பித்த நாம், இறுதியாக **"சிவப்பு"** வண்ணத்தில் திருஇருதய ஆண்டவரின் திருவிழாக் கொண்டாட்டத்தை நாம் நிறைவுச் செய்கிறோம்.

திருஇருதய ஆண்டவர் திருவிழா **"இயேசுவை"** மையப்படுத்தியது. இயேசு என்னும் ஒருவரை கடவுளும் மனிதருமானவரை, நமக்காக பாடுபட்டு, மரித்து, உயிர்த்தவரை, நம்மோடு இன்றும் வாழ்கின்றவரை நாம் கொண்டாடுகிறோம். எனவே இவ்விழா யார் ஒருவர் நம்மை தொடக்கமுதல் அன்பு செய்கிறாரோ, யார் ஒருவர் இந்த விலைமதிப்பில்லா அன்பை வெளிப்படுத்துகிறாரோ, யார் ஒருவர் இந்த அன்பினால் நமக்காக இறந்து இன்றும் நம்மை அன்பு செய்கிறாரோ அவரையே நாம் சிறப்பித்து கொண்டாடுகிறோம்.

எல்லா திருநிகழ்வு கொண்டாட்டங்களிலும் இயேசு என்ன செய்தார் என்பதையே கொண்டாடுகிறோம். அதாவது இயேசு பிறந்தார், இறந்தார், மரித்தார், உயிர்த்தார் என கொண்டாடுகிறோம். ஆனால் திரு இருதய ஆண்டவர் விழாவில் அவர் நமக்காக என்ன **"வைத்துள்ளார்"** என்பதை நாம் கொண்டாடுகிறோம். அவர் நமக்காக ஒரு **"இதயம்"** வைத்துள்ளார் என்பதை நம்புகிறோம். அவர் நமக்காக அளவில்லாத அன்பினை வெளிப்படுத்தும் இதயத்தை கொண்டுள்ளார். எனவே இயேசு நமக்காக வைத்துள்ள அன்பான இதயத்தை நாம் கொண்டாடி சிறப்பிப்போம்.

என்றும் அன்புடன்
அருட்பணி. **ஜேசுதாஸ்** ச.ச
இயக்குநர் - தீபகம்

## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

01.06.2024 புனித ஜஸ்டின் - திருப்பலி 02
02.06.2024 கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தம் பெருவிழா - திருப்பலி 03
05.06.2024 புனித போனிப்பாஸ் ஆயர் - திருப்பலி 05
07.06.2024 இயேசுவின் தூய்மை மிகு இதயம் பெருவிழா - திருப்பலி 06
09.06.2024 பொதுக்காலம் 10ம் ஞாயிறு - திருப்பலி 07
11.06.2024 புனித பர்னபா திருத்தூதர் - திருப்பலி 09
12.06.2024 அரு. பிரான்சிஸ் கெசியாண்டு மற்றும் குழுவினர் - திருப்பலி 10
16.06.2024 பொதுக்காலம் 11ம் ஞாயிறு - திருப்பலி 11
21.06.2024 புனித அலோசியஸ் கொன்சாகா - திருப்பலி 12
23.06.2024 பொதுக்காலம் 12ம் ஞாயிறு - புனித ஜோசப் கப்பாசோ-திருப்பலி 14
24.06.2024 திருமுழுக்கு யோவானின் பிறப்பு அறிவிப்பு பெருவிழா - திருப்பலி 15
29.06.2024 புனித பேதுரு பவுல் திருத்தூதர்கள் பெருவிழா - திருப்பலி 17
30.06.2024 பொதுக்காலம் 13ம் ஞாயிறு - திருப்பலி 18

## பகுதி 2: நம்பிக்கையில் வளர...

உலகை ஆளும் இயேசுவின் இருதயம் 19
புனித திருமுழுக்கு யோவான் வாழ்வு தரும் பாடம் 22
அருளாளர் பிரான்சிஸ் கெசியாண்டு மற்றும் குழுவின் தியாகம் 25
திருஅவைச் செய்திகள் 27

# பகுதி 1: வழிபாட்டு வழிக்காட்டி

## 01.06.2024 புனித ஜஸ்டின் திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிவில்சன்

இறையேசுவில் பிரியமானவர்களே, தத்துவ மேதையும் மறைசாட்சியுமான புனித ஜஸ்டின் என்பவரின் விழாவை திருஅவையோடு நாமும் இணைந்து தியானித்து சிறப்பிக்க ஒன்று கூடியுள்ளோம். இவரது காலம் கி.பி. 100-166வரை. இவர் கிரேக்க மொழி பேசும் பெற்றோருக்குப் பிறந்தவர். சிறுவயது முதலே தத்துவ இயலை மிக ஆழமாக கற்றுத் தேர்ந்தவர். இவரது காலத்தில் பிளேட்டோ போன்றவர்களைப் பின்பற்றிய தத்துவ ஞானிகளின் தோழமையில் தன்னை இணைத்துக்கொண்டவர். ஒருநாள் ஆழ்ந்த சிந்தனையோடு அலெக்சான்டிரியா நகரின் கடற்கரையோரம் நடந்துச் சென்றுக் கொண்டிருந்தபோது, திருநூலில் உள்ள இறைவாக்கினர்கள் எழுதியவற்றைப் படித்து, நாளடைவில் மீட்பரின் முன்னறிவிப்பைப் பற்றிய அனைத்தையும் புரிந்துக்கொள்கிறார். சாவைத் தழுவினவர்களும் கிறிஸ்தவ மறைசாட்சிகளிடம் எத்துணை மனவலிமை உள்ளது என அறிகிறார். வேதனைகளை தாங்கிக்கொண்டு வீரச்சாவை ஏற்றது மிக ஆழமாக இவரைத் தொட்டதால் தீவிரமாக கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு பணிபுரிய ஆரம்பித்தார்.

தனது தத்துவ மேதைக்குரிய உடையிலேயே பயணங்கள் மேற்கொண்டு உரோமை வந்தடைந்து, சில நூல்களும் எழுதியுள்ளார். அவற்றில் ஞாயிறு வழிபாடு நடந்தது பற்றியும், நற்கருணையின் பிரசன்னத்தையும், உயிர்ப்பின் தொடுதலைப் பற்றியும், அதில் நாம் எவ்வளவு பற்றுறுதியோடு இருக்க வேண்டுமென்பதையும் எழுதியுள்ளார். அதுமட்டுமல்ல, முதல் ஏவாள் சாவை கொண்டு வந்தார். மரியன்னை வாழ்வைக் கொண்டு வந்தவர் என்று முதன்முதலில் எழுதியவரும் இவரே. கி.பி. 147ம் ஆண்டில் திருஅவையைச் சேர்ந்த மன்னன் அன்னானினாஸ் பயல் ஓர் ஆணையைப் பிறப்பித்ததால் கிறிஸ்தவர்கள் பல துன்பத்திற்கு ஆளானார்கள். "உலகில் எங்கும் எக்காலத்திலும் உண்மையைச் சுட்டிக்காட்டிய ஞானிகள் யாவரும் கிறிஸ்தவர்களே எனக் குறிப்பிடுகிறார். கி.பி. 166ம் நூற்றாண்டில் எழுதிய நூலில் பல உண்மைகள் பதிவு செய்யப்பட்டுள்ளது முக்கியமாக நாம் பெற்றுக்கொண்ட நம்பிக்கை பேருண்மையின் அருமையான கோட்பாடாக அமைந்தது. இந்நூல் மார்க்சஸ் அவுரேலியசுக்கு எரிச்சலை மூட்டியது. இதன் காரணமாக சிறைப்படுத்தப்பட்டு தனது 67வது வயதில் தலைவெட்டப்பட்டு மசைாட்சியாக தனதுயிரை அர்ப்பணித்தார். தத்துவக் கலைக்கு இவர்தான் பாதுகாவலர். இவரின் வாழ்வைப் பின்பற்றி இயேசுவின் சாட்சிகளாய் வாழ இத்திருப்பலியில் பக்தியோடு பங்கு பெறுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், அருட்பணியாளர்கள் இருபால் துறவறத்தார் இறைப்பணிபுரியும் அனைத்து நற்செய்தி அறிவிப்புப் பணியாளர்கள் அனைவரும் நம்பிக்கையில் வேரூன்றியவர்களாய், இறைவனில் ஆழ்ந்த பக்திக் கொண்டவர்களாய் வாழ வேண்டிய ஆற்றலைப்பொழிந்திட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. ஒளியாம் இறைவா, நற்கருணையின் உயிர்த்துடிப்பை உணர்ந்து அதன் உண்மையை நோக்கி நடந்து அதன்படி வாழ்ந்திடவும், உமக்கெதிராக நாங்கள் செய்தக் குற்றங்குறைகளை பாராமல் எங்களை ஒருபோதும் கண்கலங்காது காத்து வழிநடத்திட வரமருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. இறை இரக்கத்தின் இருதயமே, நாட்டுத்தலைவர்களை உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் அனைவரும் தன்னலம் கருதாது உம்மைப்போன்று நாட்டு மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு செயல்படவும், எவ்வித பழியும், தீங்கும் உம் பிள்ளைகளை நெருங்காது காத்திட வேண்டுமென்று உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம்.

## 02.06.2024 கிறிஸ்துவின் திருஉடல் திருஇரத்தம் பெருவிழா திருப்பலி

**முன்னுரை**

திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. விப. 24: 3-8 II. எபி. 9: 11-15 மாற்கு 14: 12-16. 22-26

கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தப் பெருவிழா திருப்பலியில் பங்கேற்க வந்திருக்கும் நம்பிக்கையாளர்களே, இன்று இயேசு தன்னையே அப்பமாகவும், இரசமாகவும் பங்கிட்டுக்கொடுத்த உணவுத் திருப்பலியைக் கொண்டாடுகிறோம். உணவு நமது வாழ்க்கையில் அத்தியாவசியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. உணவு இல்லாமல் உயிர்வாழ முடியாது. இயேசு பிறந்த ஊர் பெத்லகேம்-அந்தப் பெயருக்கு அர்த்தம் "உணவு வீடு" ஆகும். இயேசு பிறந்தவுடன் அன்னை மரியா தீவனத்தொட்டியில் இயேசு கிடத்துகிறார். இந்த உலக மக்களை வாழ்விக்க வரும் உணவு இவர் என்று அன்னை மரியா நமக்குச் சுட்டிக்காட்டுகிறார். இந்த உணவுக் கொண்டாட்டத்தை ஒவ்வொரு நாள் திருப்பலியிலும் கொண்டாடுகிறோம். திருப்பலி என்பது இயேசுவின் திருவிருந்து ஆகும். தன்னையே பிட்டுக்கொடுத்த உணவாக வந்த இயேசுவைக் கொண்டாடுவதுதான் இன்றைய விழாவின் அர்த்தமாகும்.

இன்றைய முதல் வாசகத்தில் கடவுள் இஸ்ரயேல் மக்களோடு செய்துகொண்ட உடன்படிக்கையை நினைவு கூறுகிறோம். "நான் உங்களது கடவுளாக இருப்பேன், நீங்கள் என் மக்களாக இருப்பீர்கள்" என்ற உடன்படிக்கையினை அன்று இரத்தத்தைத் தெளித்து

அடையாளப்படுத்தினார். இரண்டாம் வாசகத்தில், இறைமகன் இயேசு, தனது இரத்தத்தைச் சிலுவையிலே சிந்தி, நம்மை இறைவனுக்குகந்த மக்களாக மாற்றுகிறார். இயேசு தன்னையே பலியாக ஒப்புக்கொடுத்து நம் பாவங்களிலிருந்து மீட்கிறார். இங்கு தன் உடலை பலியாகவும், தன் இரத்தத்தை பாவம் போக்கும் கருவியாகவும் இயேசு நமக்கு எடுத்துக் காட்டுகிறார். இன்றைய நற்செய்தியின் மூலம் இறையேசு நமக்கு கற்றுக்கொடுத்த மூன்று நிகழ்வுகளை அதாவது தனது உடலையும், இரத்தத்தையும் நமக்குகொடுத்து பகிர்வு, மன்னிப்பு, விட்டுக்கொடுத்தல் போன்ற நற்காரியங்களை நினைவு கூறுகிறோம். ஐந்து அப்பம் இரண்டு மீன்கள் பகிர்ந்து கொடுக்கின்றபோது, பகிர்வை எடுத்துரைக்கிறார். பரிசேயர் சீமோன் வீட்டில் பாவியான பெண்ணை மன்னித்து "மன்னிப்பு" என்ன என்பதை எடுத்துரைக்கிறார். கானாவூர் திருமண வீட்டின் விருந்தின்போது மானத்தைக் காப்பாற்றி மானம் காத்தல் என்பதை எடுத்துரைக்கின்றார். இயேசு இன்று தனது உடலாலும், இரத்தத்தாலும் நமக்கு உணவு படைக்கின்றார். இந்த உணவுக்கொண்டாட்டம் மற்றவர்களின் விடுதலைக்கு போராட, பிறருக்காக துன்பப்பட, கிறிஸ்துவில் அனைவரும் ஒன்றுபட நம்மை அழைக்கிறது, வாருங்கள். தகுதியான முறையில் இன்றைய உணவுக் கொண்டாட்டங்களை இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. ஆற்றலையும் ஆசியையும் பொழிபவரே, திருஅவையை ஞானத்தோடு வழிநடத்திவரும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவியர் அனைவரும் புனிதத்துவத்தை கடைப்பிடித்து நற்கருணை நாதருடன் உள்ள உறவினையும், நம்பிக்கையையும் ஆழப்படுத்த அவர்களுக்கு உமது ஆற்றலையும், ஆசியையும் அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. "எனது சதை உண்மையான உணவு, என் இரத்தம் உண்மையான பானம்" என்ற ஆண்டவரே, எம் பங்கில் வசிக்கின்ற மக்கள் அனைவரும் உண்மையாகவே பாவங்களையும், உடல்உள்ள நோய்களையும், துன்ப துயரங்களையும் போக்குகின்ற கருவி நற்கருணை என்பதை உணர்ந்து, உமது நற்கருணை பிரசன்னத்தில் நம்பிக்கைக்கொண்டு சான்று பகரும் வாழ்க்கை வாழ வரமருள உம்மை மனற்ாடுகிறோம்.

3. எல்லாம் வல்ல இறைவா, புதிய கல்வியாண்டில் அடியெடுத்து வைத்துள்ள எம் பிள்ளைகளை உமது கரத்தில் ஒப்படைக்கின்றோம். எம் பிள்ளைகளுக்கு சாலமோனின் ஞானத்தையும், தாவீது அரசனின் தைரியத்தையும் தூய ஆவியாரின் கொடைகளையும் கொடுத்து தாங்கள் எதிர்நோக்கும் எல்லாவற்றையும் வென்றிட தேவையான வரங்களைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. ஈசோப்புல்லினால் தூய்மையாக்குபவரே, உமது திருவுடல், திருஇரத்தம் ஆகியவற்றை தகுதியின்றி உட்கொண்ட பாவத்திற்காக எங்களை மன்னியும். நாங்கள் நற்கருணை பிரசன்னத்தை உணர்ந்து, பாவசங்கீர்த்தனம் செய்து தகுதியான உள்ளத்துடனே உமது உடலையும், இரத்தத்தையும் உட்கொள்ளும் தகுதியை எங்களுக்கு அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 05.06.2024 புனித போனிப்பாஸ் ஆயர் திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

இறையேசுவின் இனிய இறைமக்களே, இன்றைய தினம் நம் திருஅவை புனித போனிபாஸ் என்னும் புனிதரை சிறப்பிக்க நம்மை அழைக்கிறது. புனித போனிபாஸ் 680ம் ஆண்டு இங்கிலாந்திலுள்ள "தேவாஷீர்" என்னும் ஊரில் பிறந்தார். சிறுபிள்ளையாக இருந்தபோதே தன் இல்லத்திற்கு வந்திருந்த துறவிகள்போல் தானும் துறவியாக வேண்டும் என்று நினைத்தது, பிற்காலத்தில் அவர் பெரிய துறவியாக நேர்ந்தது. சிறுவயதில் புனித ஆசீர்வாதப்பர் மடத்தில் சேர்ந்து கல்வி கற்று பின் அதே மடத்தில் குருபட்டம் பெற்று நன்கு பணிபுரிந்தார். பின் 722ம் ஆண்டு திருத்தந்தை 2ம் கிரகோரி வரை ஜெர்மனிக்கு பணிபுரிய அனுப்பினார். அங்கு அவர் பல மக்களை மனந்திரும்பி கிறிஸ்தவத்திற்கு அனுப்பினார். அவரின் பணிகண்டு திருத்தந்தை அவரை ஆயராக்கினார். ஆயரானபின் பழைய இடத்திற்குசென்ற நமது புனிதர் அங்கு புதிய பிரச்சனை உருவாவதை கண்டார். "கிறிஸ்துவர் மற்ற தெய்வங்களா யார் பெரியவர்" என்ற கருத்து மக்களால் பேசப்பட்டது அப்போது புனித போனிபாஸ் மக்கள் வழிபட்டு கொண்டிருந்த ஒரு பெரிய மரத்தை வெட்டி வீழ்த்தினார்.

மக்கள் தெய்வம் தங்கியிருக்கும் இந்த மரத்தை வெட்டிவிட்டாரே என்று பயந்தனர். ஆனால் புனித போனிபாசுக்கு எந்த தீமையும் ஏற்படவில்லை. இதைக் கண்டு மக்கள் "கிறிஸ்துதான்" பெரியவர் என்று புகழ்ந்து கிறிஸ்துவை பின்பற்றினர். ஆனாலும் மக்களை மூடநம்பிக்கையிலிருந்து விடுவிக்க முடியவில்லை. அதனால் புதிய திருஅவையை உருவாக்கி, புதிய ஆலங்களை கட்டி மக்களை மனந்திரும்பினார். இவர் பணியாற்றும் திறமையைக் கண்டு 752ம் ஆண்டு அவரை திருத்தந்தை பேராயராக நியமித்தார். பேராயராக ஆயினும் பல பணிகளை வல்லமையோடு அதிக அளவில் புரிந்தார். 755ம் ஆண்டு ஜூன் 5ம் நாளில் "நெதர்லாண்டில்" இவர் திருமுழுக்கு கொடுத்து கொண்டிருந்தபோது அடையாளம் தெரியாத சிலரால் கொல்லப்பட்டார். உயிர்பிரியும் தருவாயிலும் அவர்களை மன்னித்து ஆண்டவரின் கையில் தன் ஆவியை ஒப்படைத்தார். பின் 1874ம் ஆண்டு 9ம் பத்திநாதரால் இவருக்கு குருப்பட்டம் கிடைக்கப்பட்டது. புனித போனிபாஸ் அவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது "கீழ்ப்படிதல்" திருத்தந்தைக்கு எந்த நேரத்திலும் கீழ்ப்படிந்தார். அவரே

இதைத்தான் அடிக்கடி கூறுவார். "அருள்பணியாளர்கள் ஆயருக்கும், ஆயர் பேராயருக்கும் பேராயர்கள் திருத்தூதர்களுக்கும் கீழ்ப்படிய வேண்டும்" என்று கூறினார். இவரின் வழிகாட்டு நெறிமுறையினை நாமும் பின்பற்றி கடவுளுக்கு ஏற்ற மக்களாக வாழ இத்திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அனைத்துலக வேந்தரே எம் இறைவா, நம் திருஅவையின் முதன்மை திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் மற்றும் திருநிலையினர் அனைவரும் கிறிஸ்துவின் நெறிமுறைகளைப் பின்பற்றி மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு, இறைத்திட்டத்தை ஏற்று மக்களை நல்வழியில் நடத்தட தேவையான அருள்வரங்களை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அருள்பொழியும் ஆண்டவரே, பொறுப்பற்ற அதிகாரிகள், அரசியல் வாதிகளால் அவர்களின் திட்டங்களினாலும், செயல்பாடுகளினாலும் துன்புறும் மக்களின் நலன்காத்து, நேர்மையான சேவைமனதுடன் பணிபுரியும் நல்ல பொறுப்பாளர்களை நம் நாட்டிற்கும், வீட்டிற்கும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கத்தின் இறைவா, சாலையோரங்களிலும், மருத்துவமனைகளிலும் கவனிப்பாரன்றி நோயின் கொடுமையால் வலியுடன் மன உளச்சலோடு வாழும் மக்களை உம் கருணையினால் அரவணைத்து, குணமளித்திட வேண்டுமென்று உம்மை மனற்றாடுகிறோம்.

## 07.06.2024 இயேசுவின் தூய்மை மிகு இதயம் பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திரு. செபாஸ்டின்

I. ஓசே. 11: 1,3-4, 8-9 II. 1எபே. 3: 8-12, 14-19 யோவா. 19: 31-37

இறையேசுவில் பிரியமான இறைமக்களே, "இயேசுவின் அன்பில்லாமல் வாழ்வது எவ்வுளவு கடினம்" அவரின் திவ்ய கரத்திலிருந்து ஆணி அறைந்த துளையிலிருந்து எழும் பிரகாச சுடரொளி. கண்களில் தெரியும் அன்பின் கசிவு திரு இருதயத்திலிருந்து எழும் பாசச்சுடர், பீரிட்டு எழும் இரக்கத்தின் ஊற்று, அன்பின் முழுப்பரிமாணம். இதையெல்லாம் அனுபவிக்க அன்பு நெஞ்சங்கள் அதிகரிக்க வேண்டுமென்பதே திருஇருதய பெருவிழா. புகழ்பாக்களின் மத்தியில் வாழும் ஆண்டவரை புகழ்வதே திருஇருதய அன்பின் பெருவிழா. "பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்போரே எல்லோரும் என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" மத் 11:28 என்று இருகரம் நீட்டி இதய தாகத்தோடு அழைக்கிறார் நம் ஆண்டவர். இயேசுவின் வார்த்தைகளிலிருந்து அன்பு, சுமைகளை தாங்கும் அன்பாகவும் எப்பொழுதும் தன்னலமில்லாத, பிறர்நலனில் அக்கறைக்கொண்டு பிறருக்காக தன் உயிரை கொடுக்கும்

வஞ்சகமில்லாத அன்பாகவும் உள்ளதை நாம் புரிந்துக் கொள்ளலாம். "அன்பே உங்கள் வாழ்வுக்கு ஆணிவேரும், அடித்தளமுமாய் அமைவதாக" (எபே 3:11) என்று தூய பவுல் கூறுகிறார். இயேசுவின் திரு இருதயத்தில் நிரந்தரமாக நிலைக்கொண்டிருக்கும் அன்பு, கருணை, பரிவு போன்ற பண்புகளை நம் இருதயங்களிலும் நிரந்தரமாக அமைய வேண்டும். அவ்வாறு வாழ்வதுதான் நம் திருஇருதய ஆண்டவருக்கு நாம் எடுக்கும் பெருவிழாவாக அமையும். இந்த சிந்தனையோடு இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பின் சிகரமே இறைவா, நீர் காட்டிய பாதையில் பயணித்து கொண்டிருக்கும் எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள் இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரையும் உம் திரு இருதயத்தில் வழிந்தோடும் அன்பின் ஊற்றால் நிரப்பி இறையாட்சி மலர செயல்படுத்தப்படும் அனைத்து செயல்பாடுகளும் சிறந்தோங்க உம்மை மன்றாடுகிறோம்.

2. தியாகத்தின் திரு உருவே இறைவா, தனக்கு குறிக்கப்பட்ட பணியை நினைத்து மனதில் கலக்கம் கொண்டாலும் உமது பரிகார பலியின் செயல்திட்டத்தை நிறைவேற்றி உலக மக்களுக்கு இரட்சணியம் வழங்கிய திருமகனைப்போல் நாங்களும் தன்னலம் கொள்ளாமல் பிறருக்காக தியாகமேற்கும் நல்லுள்ளத்தை வழங்குமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. குணமளிக்கும் இறைவா, ஆரவார, ஆடம்பர வாழ்வே பெரிதென நினைத்து தெய்வ பயம் என்பதே அறியாமல் மனம் போனபடி வாழ்ந்துக் கொண்டிருக்கும் பேதை நெஞ்சங்களை உம் ஞான ஒளியால் திசை திருப்பி குணமளிக்க வேண்டுமென்று இயேசுவின் திருஇருதயமே எம்மில் இரங்குமாறு உம்மை மன்றாடுகிறோம்.

4. நீதியின் தேவனே இறைவா, நடந்து முடிந்த தேர்தலில் வெற்றிப்பெற்றுள்ள தலைவர்கள் இனிமேலாவது மக்களின் தேவைகளை கருத்தில் கொண்டு நாட்டிற்கு பயன்தரக் கூடிய நல்ல திட்டங்களை, செயல்பாடுகளை செயல்படுத்த வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 09.06.2024 பொதுக்காலம் 10ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திருமதி. லதா சுரேஷ்

I. தொ.நூ. 3: 9-15 II. 2கொரி. 4: 13-5:1 மாற்கு 3: 20-25

இறையேசுவின் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்றைய வாசகம் கடவுளின் கோபம் அதனால் ஏற்படும் தண்டனை, தண்டனையிலிருந்து மீட்பு மீட்பினால் பெறும் பேறு அப்பேறும் உரிமைப்பேறு என்னும் வகையில் அமைகின்றது. இறைவனின் படைப்புகளில் உன்னத

படைப்பு தன்சயாலில் உண்டான மனிதன் தனக்கு கீழ்ப்படியாமையினால் ஏதேன் என்னும் சொர்க்கத்திலிருந்து தள்ளப்படுகிறான். ஆனால் இறைவன் அவர்களை அப்படியே விட்டுவிடவில்லை. இவ்வுடல் அழியக்கூடியாது, இவ்வலக வாழ்வு நிலையில்லாதது என்பதை உணர்த்தவும் தம் அருளில் தம் மக்களை அழைத்து வர நிலையான மனிதரால் கட்டமுடியாது. ஆனால் அவனால் நிலையாக அவ்வீட்டில் வாழ வழிவகைச் செய்கிறது. அதற்கு மனிதனுக்கு தேவையான ஒரு தகுதி "கடவுள்மீது நம்பிக்கை, அவரே மீட்பர் இவ்வுலக துன்ப வாழ்விலிருந்து மீட்படைய செய்ய வல்லவர்" என்பதை "விசுவசிக்க" வேண்டும்.

அவ்வாறு அவர்கள் நம்பிக்கையோடு இருக்கும்போது நிலையான பேரின்ப வீட்டில் எந்நாளும் குடிக்கொள்ள முடியும் என்பதை விளக்குகிறது. அவ்வாறு நிலைவாழ்வை நாம் ஏற்கும்பொழுது அதனை தடைசெய்ய, செயல்படாமல் நம்மை அழிக்கவல்ல பிசாசின் திட்டங்களை முறிக்க ஒரு பெண்ணின் மூலம் பிறந்தவராய் ஒரு மீட்பரை நமக்கு அளித்துள்ளார். நம்மை சோதிக்கும் பிசாசை குதிங்காலைத்தான் தொட இயலும் அதற்கே அதன் தலையை மிதித்துப்போட பெண்ணின் வித்திற்கு வல்லமை அளிக்கவல்லது. அவ்வாறு நாம் இவ்வுலக பிரகாரமான சோதனைகளை வெல்லும்பொழுது கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவராக மாறுகின்றோம். அதனால் இயேசுவின் சகோதரரும் சகோதரியும் தாயும் என்னும் நிலைக்கு உயர்த்தப்படுகின்றோம். அன்பு இயேசுவின் சகோதர சகோதரியாக நாம் மாற நம்மை தொடரும் சோதனைகளை முறியடிக்க இறைவனிடம் அன்புக்கொண்டவர்களாய் விசுவாசத்தில் நிலைப்பெற்று வாழ இத்திருப்பலியில் இணைவோம், இயேசுவின் உறவில் சங்கமிப்போம், புதுவாழ்வு பெற்று நிலையான இன்பப் பேறுபெற விண்ணக வீட்டின் குடிமக்களாய் மாறுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பு இறைவா, எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உமக்கேற்ற பாதையில் தங்களை பயன்படுத்திக்கொண்டு உம்பணி சிறக்க தங்கள் பணியினைச் சிறப்பாக செயல்படுத்தத் தேவையான அருள்வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. பாதுகாப்பின் பெட்டகமே, வறண்ட உலகில் நீரோடையை உண்டாக்குவேன் என்றவரே, இன்று பருவநிலை மாற்றத்தால் இயற்கைக்கு எதிர்மாறான நிகழ்வுகள் நிகழ்கின்றன. இவற்றை நீர் ஒருவரே கட்டுப்படுத்தக்கூடியவர் என்பதை நாங்கள் உணர்ந்து உம்மிடம் எங்கள் எதிர்ப்பார்ப்புகளை சமர்ப்பித்து மன்றாடுகிறோம், அவற்றை பெற்றுத்தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே, எம் சகோதரரும், சகோதரியும் தாயும் ஆவார் என்றுரைத்தவரே இன்று பெற்றத்தாய் தந்தையின் உணர்வுகளை பரிந்துக்கொள்ளாத பிள்ளைகள, அதனால் முதியோர் இல்லங்களில் அனாதையாக விடப்பட்ட பெற்றோர் இவர்களுக்கு நீரே தாயும், தந்தையும், பிள்ளையுமாக இருந்து காத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. ஞானத்தின் ஊற்றே எம் இறைவா, பள்ளிகள், கல்லூரிகளில் படிக்கின்ற பிள்ளைகளை உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். அவர்களுக்கு படிக்கக்கூடிய நல்ல சிந்தனையும், ஞானத்தையும் அளித்தருளவும், ஆசிரியர்கள் பிள்ளைகளின் திறமைகளைப் புரிந்துக்கொண்டு அவற்றிற்கேற்போல் கல்வி ஞானத்தை அளிக்கக்கூடிய ஆற்றலையும், சக்தியையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 11.06.2024 புனித பர்னபா திருத்தூதர் திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

இவர் சைபரஸ் என்னும் தீவில் பிறந்தார். இவருடைய பெற்றோர்கள் யூதர்கள் பெந்தகோஸ்தே விழாவிற்குப்பின் இவர் கிறிஸ்தவரானார். இவர் புனித சவுலுடன் சேர்ந்து புறவினத்தாரை மனந்திருப்புவதில் ஈடுபட்டார். சவுலுடன் பல இடங்களுக்கு பயணம் செய்தார். இவரது பழைய பெயர் ஜோசப். அப்போஸ்தலர்கள் இவர் பெயரை "பர்னபாஸ்" என்று மாற்றினார்கள். பர்னபாஸ் என்பதற்கு போதிக்கப்பிறந்தவர், ஆறுதல் தருபவர் என்று பொருள். இவர் தனது பேச்சுத்திறமையால் பலரை மனந்திருப்பினார். இவர்தான் தொடக்கத்திருஅவையை துன்புறுத்தி வந்த சவுல் என்பவருக்காக சீடர்களிடம் பரிந்து பேசினார். அந்தியோக்கியா நகரில் நிறுவப்பட்டிருந்த திருஅவையை உறுதிப்படுத்தும்படி அங்கு சென்றார். தம்முடன் உழைக்கும்படியாக புனித சவுலைக் கேட்டுக்கொண்டார். பின்னர் புறவினத்தாரை மனந்திருப்பும்படி ஆசியாவிலுள்ள அநேகப்பட்டணங்களுக்குள் சவுலுடன் சென்றார். இவரது வரலாறு அப்போஸ்தலர்பணி ஆகமத்திலும், புனித பவுல் எழுதிய கலாத்தியருக்கு எழுதிய நிருபத்திலும் காணப்படுகிறது. சைபரஸ் தீவில் வேத விரோதிகளால் கல்லால் எறியப்பட்டு கொல்லப்பட்டார். அவருடைய திருப்பண்டங்கள் சைப்ரஸின் அருகாமையில் கிடைத்தன என்றும் அந்தக் கல்லறையில் எபிரேய மொழியில் எழுதப்பட்ட மத்தேயுவின் நற்செய்தி கிடைத்ததாகவும் கூறப்படுகிறது. புனித பர்னபாவைப்போன்று நாமும் வாழ வரம்வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம்வல்ல அன்புஇறைவா, திருஅவையைவழிநடத்தும்திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், இருபால் துறவறத்தார் பொதுநிலையினருக்கு நல்ல உடல் உள்ள நலனளித்து,

தூய ஆவியாரின் வல்லமையோடு திருஅவையை நிலைவாழ்விற்கு வழிநடத்திச் செல்ல வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. தூய்மையே உருவான இறைவா, உலகிலுள்ள தலைவர்கள் ஆட்சியாளர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மக்களை நேர்மை, ஒற்றுமை, அமைதி வழியில் நடத்திச் செல்லவும் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கு தகுந்த உதவிகள் செய்திடவும், தங்களின் பதவியை ஆக்கச் செயலுக்கு பயன்படுத்தும் நல்ல மனதைத்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பே உருவான இறைவா, இன்றைய புனிதர் பர்னபாவைப்போல திருஅவையின்மீது பற்றும் மதிப்பும் உள்ளவர்களாகவும், பிறருக்கு உதவிபுரிவதில் தாராளமனதை எங்களுக்கு அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 12.06.2024 அரு. பிரான்சிஸ் கெசியாண்டு மற்றும் குழுவினர் திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் அலெக்ஸ்

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, "இவையனைத்தையும் கடைப்பிடித்துக் கற்பிக்கிறவரோ விண்ணரசில் பெரியவர் எனக் கருதப்படுவார்" என்றும் ஆண்டவரின் அருள்மொழிகளை இன்றைய நற்செய்தி நம்மை தியானிக்க அழைக்கிறது. மேலும் அருளாளர் பிரான்சிஸ் கெசி மற்றும் அவரது 4 நண்பர்களின் விழாவை நாம் கொண்டாடுகிறோம். இந்த 5 இளையோர்கள் இறைவார்த்தையிலும், இறைப்பற்றிலும், நம்பிக்கையிலும் மற்றும் சலேசிய ஆன்மீக உணர்விலும் வாழ்ந்தவர்கள் என்பதாலேயே அவர்கள் சிறை பிடிக்கப்பட்டனர். செபமாலை, தொன் போஸ்கோ மற்றும் சகாய அன்னையின் நவநாட்கள் அனுசரிப்பது, நல்ல ஒப்புரவு பெற்று தினமும் நற்கருணை உட்கொண்டு செபிப்பது, பிறருக்காக உழைப்பது, உதவுவது, தேவை ஏற்பட்டால் உயிரையே தியாகம் செய்வது என தங்கள் வாழ்வில் நிருபித்தவர்கள். அவர்களது இறைப்பற்று மற்றும் இறை பராமரிப்பின் மீதுள்ள ஆழ்ந்த நம்பிக்கை ஒருபோதும் தளரவில்லை. அதுவே அவர்களை இறுதிவரை நம்பகமான மறைசாட்சிகளாக உயர்த்தியது என்பதை நாம் பார்க்கின்றோம்.

இன்றைய நற்செய்தி கூறுவது போல இறைவார்த்தையைக் கடைப்பிடித்து, அதை பிறருக்கு அறிவிப்பதுதான் நமது தலையாயக் கடமையாக இருக்கிறது. இறைவார்த்தையை அறிவிக்கிறவர்கள் பெரியவர்கள் அல்லர். அது எளிதான ஒரு செயல்தான் என்றாலும் அதன்படி வாழ்ந்து அறிவிப்பவர்கள்தான் உண்மையிலேயே பெரியவர்கள், அவர்களைதான் நாம் புனிதர்கள் என்கிறோம். எனவே இறைவார்த்தையின்படி வாழ்வதே மிகப் பெரிய நற்செய்தி அறிவிப்பு என்பதை உணர்ந்தவர்களாய் நாம் வாழ, அருளாளர் பிரான்சிஸ் கெசி மற்றும் அவரது குழுவினரிடம் காணப்பட்ட சாட்சிய வாழ்வையும்,

தாழ்ச்சியையும், எளிமையையும் நமதாக்கிக் அதன் வழியாக இறையருள் நிறைவாய் பெற்றிட வரம் வேண்டி தொடர்ந்து இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நம்பிக்கையின் நட்சத்திரமே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள் இருபால் துறவிகளுக்காக மன்றாடுகிறோம். உள்ளமும் செயலும் நன்மையைக் கனியாக ஈந்தால்தான் முழுமையாக மனிதம் மலர்கிறது என்பதை அவர்களின் வாழ்வின்மூலம் நாங்கள் அறிந்து மனிதம் மலரும் இடத்தில் புனிதம் மணம்வீசும் என்பதற்கிணங்க இவர்கள் உம்வழியில் நாளும் வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. கொடைகளின் தந்தையே, நீர் எங்களுக்குத் தந்திருக்கின்ற கட்டளைகளை முழுமனதோடு ஏற்று அதன்படி வாழும் வரத்தை தந்தருளும். நாங்கள் பெற்றுக்கொண்ட உம் கட்டளைகளை மற்றவர்களுக்கும் அறிவிக்கின்ற பேற்றினை தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. வாழ்வின் ஊற்றே எம் இறைவா, வெறும் வார்த்தைகள் செயல்பாடுகளுக்கு இணையானதாக மாறிவிட முடியாது என்பதை உணர்த்தினீரே, கிறிஸ்வதர்களாகிய எங்கள் வாழ்வு செயல்பாடுகளுக்கு முன்னுரிமையும் முதன்மையான இடத்தையும் கொடுப்பதாக அமைய, செயல்பாடுகள் நிறைந்த உண்மையான கிறிஸ்தவர்களாக நாங்கள் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 16.06.2024 பொதுக்காலம் 11ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிவில்சன்

I. எசே. 17: 22-24 II. 2கொரி. 5: 6-10 மாற்கு 4: 26-34

அன்பு இறைச்சமூகமே, இன்று பொதுக்காலம் 11ம் ஞாயிறு திருப்பலியைச் சிறப்பிக்க இங்கு கூடியுள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். திருப்பலியில் இணைந்து செபித்து தியானப்பலியில் பங்கேற்று கனிதரும் மரங்களாக மாறுவோம். பேரன்பு கொண்ட இறை உள்ளங்களை இன்று நமக்கு வழங்கப்படுகின்ற திருநூலின் அனைத்து இறைவார்த்தைகள் முதலில் நட்டு, துளிர்த்து, வளர்வது பற்றியும் இரண்டாவது அதன் செயலாக்கம் பற்றியும் மூன்றாவது அதன் கனிதரும் சுவை பயன் பற்றியும் மிக ஆழமாக எடுத்துரைக்கின்றது. நம்மை விதைக்கின்றவர் நடுகின்றவர் செழிக்க வைப்பவர் இறைவன். ஆகையால் நாம் என்றும் அவரோடு இணைந்து இருக்க வேண்டும். பக்கத்தில் தீமை எனும் களைகள் நம்மை உரசினாலும் வளர விடாமல் தடுத்தாலும்

என்றும் ஆண்டவரோடு குடியிருக்கவே விரும்ப வேண்டும். அவரில் நாம் குடியிருந்தாலும் குடி பெயர்ந்தாலும் அவரை விட்டு விலகக்கூடாது என்பதை மிக தெளிவாக நமக்கு உணர்த்துகிறது. ஆகையால் இன்று நாம் உறுதியெடுப்போம், என்ன நேர்ந்தாலும் என்றும் இறைத் துணையோடு இணைந்து வாழ்வோம், செழித்து வளர்வோம். கனிதருவோம், என்ற சிந்தனையோடு இத்திருப்பலியில் பக்தியோடு பங்கேற்று பயன்பெறுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, உம்மோடு இணைந்து உமது கருவியாக செயல்பட அழைத்தவரே, எம் தாய் திருஅவையின் பணியாளர்கள் அனைவரும் இறையாட்சியை உருவாக்க வேண்டிய பணியாளர்களாக, நற்கனிதரும் மரங்களாக வாழ வேண்டிய பேரருளை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. எம்மை படைத்து பராமரிப்பவரே, நாங்கள் அனைவரும் உமது பிள்ளைகள் என்பதை நாங்கள் மறவாமல் உம்மிலே ஆழ்ந்த நம்பிக்கையும், பற்றுறுதியும் கொண்டு வாழவும், உம்மை மட்டுமே நாங்கள் சுமந்து, உம் வழியில் நடந்து மற்றவர்களையும் அவ்வழியில் நடத்திடத் தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. அரசருக்கெல்லாம் அரசரே எம் இறைவா, உலகிலுள்ள அனைத்து மக்களும் எவ்விதமான சண்டைச் சச்சரவுகளுமின்றி ஒற்றுமையோடும், சமாதானத்தோடும் ஒன்றுப்பட்ட மக்களாக வாழும் நல்மனதை அளித்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. கருணை வடிவமே இறைவா, அன்று திருத்தூதர்கள் வேதசாட்சிகள், மறைச்சாட்சிகள், பற்றுறுதியோடு செயல்பட்டதுபோல் உலகத் தலைவர்கள், நாட்டுத் தலைவர்கள், மக்களை வழிநடத்தும் தலைவர்கள் அனைவரும் தங்களின் அழைத்தலின் மேன்மையை உணர்ந்து உமக்கேற்ற சாட்சிய வாழ்க்கை வாழ வரமருள உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம்.

## 21.06.2024 புனித அலோசியஸ் கொன்சாகா திருப்பலி

**முன்னுரை**

திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

இன்று திருஅவையானது "ஞானப்பிரகாசியார்" என்று அழைக்கப்படும் புனித அலோசியஸ் கொன்சாகாவின் திருவிழாவைக் கொண்டாடி மகிழ்கின்றது. இவர் மார்ச் மாதம் 1561ம் ஆண்டு இத்தாலி நாட்டில் ஒரு உயர்குடியில் பிறந்தார். இறையன்பு, கடுந்தவம், இறைபக்தி ஆகியவைகளைத் தனதாக்கி தூயவராக வாழ்ந்து வந்தார். இவர் தனது 12ம் வயதில் புதுநன்மை வாங்கினார். அரண்மனை வாழ்வை ஒதுக்கிவிட்டு இயேசு சபையில் பலவித எதிர்ப்புகளுக்கு மத்தியில் சேர்ந்தார். இவர்

மற்ற துறவிகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார். ஒவ்வொரு நாளும் பலமணிநேரம் செபம், தவம் போன்ற காரியங்களில் ஈடுபட்டார். இவரது பிரதான புண்ணியம் கீழ்ப்படிதலாகும். "கோனலான இரும்புக்கம்பி நான் அதை சரிப்படுத்தவே" நான் துறவற சபையில் சேர்ந்தேன் என்று இவர் அடிக்கடி சொல்வார். 1591ல் இத்தாலியில் பஞ்சம் ஏற்பட்டது. உரோமை நகரில் பிளேக் நோயால் ஏராளமானோர் இறந்தனர். கொன்சாகா நோயாளிகளைக் கரிசனையோடு கவனித்து மருந்துகள் கொடுத்து வந்தார். கிறிஸ்துவின் பொருட்டு பல துன்பங்களை ஏற்றுக்கொண்டார். இறுதிநாட்களில் பல நாட்கள் கொடிய வேதனைப்பட்டு தனது 25ம் வயதில் அதாவது 1891ஆம் ஆண்டு, ஜூன் 21ம் நாள் இறையடிச் சேர்ந்தார். இவர் இறக்கும்போது அந்த இரவு முழுவதும் தூய இராபர்ட் பெல்லார்மின் இவரது படுக்கையருகில் இருந்தார். இவர் மாணக்கர், இளையோர், எய்ட்ஸ் நோயாளிகளின் பாதுகாவலர். இன்றைய நாளில் புனிதர் வழியாக கீழ்ப்படிதல் என்னும் புண்ணியத்தை நமதாக்கிக் கொள்ள திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பின் பரம்பொருளே எம் இறைவா, நீர் உருவாக்கிய திருஅவைக்கு எதிராக இருந்து கொண்டு திருஅவைக்கு எதிராக செயல்பட நினைப்பவர்கள் ஆகியோரிடமிருந்து திருஅவையை பேணிப்பாதுகாத்து, திருஅவையை தலைமையேற்று நடத்திவருகின்ற திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் ஆகியோரை நீர் பாதுகாத்து வழிநடத்திட வேண்டுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. நீதியின் அரசரே எம் இறைவா, மக்களின் உரிமைக்காகவும், வாழ்வுக்காகவும் போராடும் மனசாட்சியுள்ள மணிதர்களின் கூட்டம் நம்பிக்கையுணர்வோடு "இழப்பதற்கு ஒன்றுமில்லை உயிரைத்தவிர" என்ற எண்ணத்தில் மக்களின் வாழ்க்கைப் பிரச்சனை, உயிர்பாதுகாப்பு பிரச்சனை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு பிரச்சனை போன்றவைகளுக்காக போராடும்போது அவர்களுக்கு நியாயம் கிடைக்க, நீதிகிடைக்க வேண்டுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. தாயும் தந்தையுமான இறைவா, இல்லாதவர்களைக் காணும்போது நாங்கள் உம்மையே காண்கிறோம் என்பதை உணரவும், அவர்களோடு பரிவன்போடு பேசுகையில் உம்மோடே உறவாடகிறோம் என்ற மகிழ்வோடு நாங்கள் அனைவரோடும் ஒற்றுமையோடும் சமாதானத்தோடும் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 23.06.2024 பொதுக்காலம் 12ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. மாலா செபமாலை

I. யோபு 28: 1, 8-11 II. 2கொரி. 5: 14-17 மாற்கு 4: 35-41

இறையேசுவில் விசுவாசம் கொண்ட இறைமக்களே, இன்று பொதுக்காலம் 12ம் ஞாயிறு திருப்பலிக்கு வருகைத்தந்து, புனித ஜோசப் கபாசோ அவர்களின் விழாவை சிறப்பிக்க ஒன்று கூடியுள்ளோம். இவர் காஸ்டினோ டி அஸ்தி பிலட்மோன்ட் என்னும் ஊரில் இத்தாலியில் விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். தூரின் நகரில் உள்ள குருத்துவக் கல்லூராயீல்சேர்ந்து படித்து 1833 அன்று குருவா திருநிலைப்படுத்தப்பட்டார். இறையியல் படிப்பை புனித பிரான்சிஸ் குருத்துவக் கல்லூரியில் இத்தாலியில் தொடர்ந்தார். தூரில் உள்ள கல்லூரியில் அறநெறி என்னும் இடத்தில் இங்கு இளம் குருமாணவர்களுக்கும், குருக்களுக்கும் புண்ணிய வாழ்வு, தூய்மையான வாழ்வு வாழவேண்டும் என்று வலியுறுத்திக் கூறி வகுப்புகள் நடத்தினார். தனது இறைபணியில் சிறைக் கைதிகளுக்கும் தூக்குத் தண்டனைப் பெற்ற கைதிகளுக்கும் தமது அன்பான, மறுவாழ்வுப் பற்றியதான ஆறுதல்தரும், தனது பேச்சால் அவர்களை மகிழ்வித்து அதிகநேரத்தை செலவழித்தார். தமது இறைப்பணியில் ஒப்புரவு அருளடையாளத்தைப்பற்றிய தெளிவான கருத்தை குருக்களுக்கு மிகச்சிறந்த தயாரிப்பளித்தார். மேலும் ஏழைகளுக்கும், அனாதைகளுக்கும் உதவும் வகையில் இறை பராமரிப்பின் சிறிய இல்லம் ஒன்றைக் கட்டினார்.

இவர் 1827ல் புனித தொன்போஸ்கோவை சந்தித்தது முதல் இருவரும் மிகச்சிறந்த நண்பர்களாயினர். புனித ஜோசப் கபாசோவின் தூண்டுதலாலும் உற்சாகப்படுத்தியதாலும் புனித தொன்போஸ்கோ ஏழை எளிய மாணவர்கள், இறைபராமரிப்பின் சிறிய இல்லத்திலிருக்கும் மாணவர்களோடு இணைந்து செயல்பட்டார். இவர் ஜூன் மாதம் 23ம் நாள் இத்தாலியில் தூரின் பட்டினத்தில் 1860ம் வருடம் உயிர்நீத்தார். திருத்தந்தை 12ம் பத்திநாதர் 1947ம் ஆண்டு இவரை புனிதர் நிலைக்கு உயர்த்தினார். புனித தொன்போஸ்கோ தான் எங்கு மறையுரை ஆற்றினாலும் புனித ஜோசப் கபாசோவை குருக்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாகச் சொல்லி போதிப்பார். இப்புனிதர் வாழ்க்கையை நாமும் பின்பற்றி இறையேசுவை அனைவருக்கும் நமது சொல்லாலும் செயல்களாலும்அறிவிப்போம் என்ற முழு நம்பிக்கையோடு இத்திருப்பலியில் பக்தியோடு மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அருட்கொடைகளை வழங்குபவரே, உமது திருஅவையின் திருப்பணியாளர்கள் தங்களிடம் ஒப்படைத்த இறைமக்களையும், இறை இல்லங்களையும் உம்மிடமுள்ள புனிதத்துவத்தோடு இவர்களும் வாழ்ந்து இறைமக்களையும் உம் வழியில் அழைத்துச்செல்ல வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

2. நம்பிக்கையின் நங்கூரமே இறைவா, நாட்டுத்தலைவர்கள் மதம், ஜாதி, மொழி அடிப்படையில் மக்களை வேறுபடுத்தாமல் மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவும், எவ்விதமான தீமைகளும் ஏற்படாமல் நாட்டு மக்களை காக்க வேண்டிய கடமையை மனநிறைவோடும், முழுமையாகவும் செய்யக்கூடிய நல்மனதைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. கீழ்ப்படிதலின் முன்மாதிரியே, குழந்தைகள் முதல் இளைஞர்கள் வரை தங்களின் பெற்றோர்களுக்கும், பெரியவர்களுக்கும் கீழ்ப்படியாமல் தங்களின் விருப்பத்திற்கேற்ப வாழ்க்கையை சீரழித்துக்கொள்கின்ற நிலைமையை மாற்றி, தங்களின் வாழ்க்கையை உமக்கேற்றப் பாதையில் தங்களை உட்படுத்திக்கொள்ளும் மனப்பக்குவத்தை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. இயற்கையை படைத்து அதில் மனிதனை உண்டாக்கியவரே, நீர் உருவாக்கிய அனைத்தும் நல்லதெனக் கண்டு மகிழ்ந்தீர். ஆனால் இன்றைய உலகம் பலவிதமான ஆராய்ச்சியினால் அவற்றை ஒவ்வொன்றாக அழித்துக்கொண்டும், மக்களை கொடூரமான முறையில் ஒருவரையொருவர் தாக்கிக்கொள்கின்றனர். இந்நிலை மாறி ஒருவரையொருவர் அன்பு செய்து வாழும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 24.06.2024 புனித திருமுழுக்கு யோவானின் பிறப்பு அறிப்பு பெருவிழா

**முன்னுரை**

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

I. எசா. 49: 1-6 II. தி.ப. 13: 22-26 லூக். 1: 57-66,80

இறையுறவில் வாழ்ந்துக்கொண்டிருக்கும் அன்பு சகோதர சகோதரிகளே, இன்று தாயாம் திருஅவையானது புனித திருமுழுக்கு யோவானின் பிறப்புப் பெருவிழாவைக் கொண்டாட நம்மை அழைத்திருக்கின்றது. நாலாயிரம் ஆண்டுகளாக முன்னறிவிக்கப்பட்ட மெசியாவின் காலம் நிறைவுற்றபோது, இயேசுவின் மீட்புப்பணி தொடங்குகிறது. ஆனால் அந்தப்பணியின் சிறப்பையும், முழுமையையும் காட்ட ஏற்கெனவே முன்னறிவிக்கப்பட்ட பாணியில் ஒருவர் தேவையாக இருந்தார். நற்செய்தியாளர்கள் திருமுழுக்கு யோவானை இயேசு கிறிஸ்துவின் பிறப்புக்கும், பணிவாழ்வுக்கும் இறப்புக்கும் முன்னோடியாகக் காட்டுகின்றனர். யோவானின் பிறப்பு முன்னறிவிக்கப்பட்டு அவர் இயேசுவுக்கு முன்பாக பிறந்ததையும் அவர் தன் தாய்வழியில் இயேசுவுக்கு உறவினர் என்பதையும் லூக்கா சுட்டிக்காட்டியுள்ளார். இயேசுவின் மீட்புப் பணியில் பங்குபெற மக்களைத் தயார்ப்படுத்தும் பணியை ஏற்கும் யோவான் துறவியாக வாழ்ந்து தாம் வழங்கிய போதனையால் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றார்.

யோவான் "எஸ்ஸேனியரா" என்ற கேள்வி எழுகிறது. எஸ்ஸேனியர்கள் மெசியாவின் வருகையை எதிர்ப்பார்த்து, "கும்ரான்" என்ற பாலைநிலப்பகுதியில் துறவற சமூகம்போல் ஒன்று சேர்ந்து வாழ்ந்தவர்கள். இவர்களிடையே திருமுழுக்குச் சடங்கு இருந்ததாகத் தெரிகிறது. யோவானும் திருமுழுக்கு அளித்ததால் அவர் ஒருவேளை "எஸ்ஸேனியராக" இருப்பாரோ என்று சில அறிஞர்கள் கூறுகின்றனர். இயேசு ஆற்றிய மீட்புப்பணியின் நிறைவு அவருடைய பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகும். யோவான் தான் கூறிய போதனையின் காரணமாக "ஏரோதுவினால் சிறைப்படுத்தப்பட்டு பிறகு ஏரோதியாளின் வஞ்சகத்தால் தலைவெட்டப்பட்டு இறந்தது. இயேசுவுக்கு முன்னோடியாக இருந்தவர் என்பதைக் காட்டுகிறது. இறைவாக்கினருடைய அடிப்படை பண்புகள் இரண்டு. ஒன்று பணிவு, மற்றொன்று துணிவு. மெசியாவின் மிதியடிவாரை அவிழ்க்கக்கூட நான் தகுதியற்றவன் என்று கூறிய திருமுழுக்கு யோவானின் தாழ்ச்சியே அவரின் இறைவாக்குப்பணியின் அடித்தளம்.

விரியன் பாம்பின் குட்டிகளே, மனம்மாறுங்கள் என்ற அவரின் எச்சரிக்கும் குரல் அவரது துணிச்சலுக்கு ஓர் உதாரணம். பணிவினால் இறைவாக்கினர் மனிதரானார். திருமுழுக்கு யோவான் தன்னுடைய மறைசாட்சிய மரணம் வரையிலும் இலக்குத் தெளிவோடு வாழ்ந்து திருஅவை வரலாற்றில் நீக்கமற இடம் பிடித்துள்ளார். நம் வாழ்வு முறையையும் உற்று நோக்கி, கண்முன்னே நடந்தேறும் தவறுகளையும் சமூக அவலங்களையும் தட்டிக்கேட்டு யோவானைப்போல வாழ்வோம் என்ற சிந்தனையோடு இப்பெருவிழாத் திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல நீதியின் அரசரே எம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை பிரான்சிஸ், கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் இறையரசு பணியில் திருமுழுக்கு யோவானைப் போல் இறைப்பணியாற்றி ஒரே மனதுடன், துணிவோடு திருஅவையை பேணிகாக்கும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. பேரிரக்கமுள்ள தந்தையே, நெருக்கடியான நிலையில் எங்களுக்கு ஏற்படும் துன்ப துயரங்கள், தீராத வியாதிகள், கடன்தொல்லைகள், விரிசலான உறவுகள், வேதனைகள், சோதனைகள் முதலியன மனவேதனையை உண்டாக்குகின்றன.இவற்றிலிருந்து எங்களை விடுவித்து, மகிழ்ச்சியான வாழ்வை அளித்தருள வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. வாழ்வளிக்கும் வள்ளலே எம் இறைவா, நாட்டையாளும் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள், அரசியல் தலைவர்கள், அதிகாரிகள் அனைவரும்

இனம், மொழி, மதம் எனும் பாகுபாடுகளைக் களைந்து அனைவரும் ஒரே இன மக்கள் என்பதை தங்களின் மனதில்கொண்டு, செயல்படக்கூடிய நல்மனதைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 29.06.2024 புனித பேதுரு பவுல் திருத்தூதர்கள் பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

I. திப. 12: 1-11 II. 2திமொ. 4: 6-8.17-18 மத். 16: 13-19

இறையேசுவின் இறைமக்களே, இன்றைய நாளில் நம் திருஅவை புனிதர்கள் பேதுரு பவுல் ஆகியோரின் பெருவிழாவை சிறப்பிக்க அழைக்கிறது. **புனித பேதுரு:** மீன்பிடித்து கொண்டிருந்தவரை இயேசு அழைத்து, "இனி மனிதர்களை பிடிப்பவனாயிரு" என்று கூறி தன் சீடராக்கினார். அதன்பின் இயேசுவே "மெசியா" என்பதை கண்டுணர்ந்து "நீரோ மெசியா" என்று உறுதிப்படுத்தியவர், புனித பேதுரு இயேசு பிடிப்பிட்டபோது "மும்முறை" மறுதலித்தவர் என்றாலும் தூய ஆவியானவரை பெற்றபின் அவரின் உறுதிப்பாட்டை கண்டு திருஅவையை அவரிடமே ஒப்படைத்தார். **புனித பவுல்:** கிறிஸ்தவர்களை வதைத்த சவுலாக இருந்து பின் இயேசுவின் அழைப்பினார் "தமஸ்கு" நகரில் பவுலாக மாறினார், புனித பவுல் இயேசுவின் உயிர்ப்புக்கு பிறகு அழைக்கப்பட்டவர். இருவருமே திருஅவையின் இரண்டு தூண்களாக கருதப்பட்டவர்கள்.

புனித பேதுரு திருஅவையின் தலைமை பணியை ஏற்று வழிநடத்தும் பணியிலும், புனித பவுல் திருஅவையின் நற்செய்தி பணியை ஏற்று பாலஸ்தீன் பகுதிக்கு வெளியிலும் நற்செய்தி பணியை ஏற்று பாலஸ்தீன் பகுதிக்கு வெளியிலும் சுற்றுப்பயணங்கள் மேற்கொண்டு பிற இனத்தாருக்கும் மடல்கள் எழுதி போதித்து மனந்திரும்பியவர். இவர் 13ம் தூதர் எனவும், பிற இனத்தாரின் திருத்தூதர் எனவும் அழைக்கப்படுகிறார். இருவருமே மறைசாட்சிகளாக உயிர்த் துறந்தவர்கள். இருவரும் ஒன்றாக "பாமர்டைன்" சிறையில் அடைக்கப்பட்டவர்கள். புனித பவுல் "சால்வியன்" என்னும் இடத்தில் தலைவெட்டுண்டு இறந்தார். அவ்விடத்தில் பவுல் பேராலயமும் அதில் அவர் கல்லறையும் உள்ளது. புனித பேதுரு கி.பி 64ல் நீரோ மன்னன் காலத்தில் சிலுவையில் தலைகீழாக அறையுண்டு இறந்தார். இவ்விரு புனிதர்களுமே இயேசுவிற்காக அவரது நற்செய்தியின் பொருட்டு தங்கள் உடல் பொருள் ஆவியை கையளித்தவர்கள். திருஅவையின் நிர்வாக பணியும், நற்செய்தியின் வளர்ச்சி பணியும் சேர்ந்து கிறிஸ்தவ வாழ்வு தழைக்கவும் இயேசுவின் இறையாட்சி அமைதியுடன் செயல்பட வேண்டி உழைத்தவர்கள். இவர்களின் வாழ்வை முன்மாதிரியாகக் கொண்டு நாமும் வாழ வரம்வேண்டி இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருஅவையை தோற்றுவித்த இறைவா, புனித பேதுருவின் வழிவந்த

திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள் மற்றும் இருபால் துறவறத்தார் அனைவரும் ஒரே மனநிலையுடன் இயேசுவின் கட்டளைகளை கடைப்பிடித்து கிறிஸ்தவம் தழைத்தோங்க தம்மையே அர்ப்பணிக்கும் மக்களாக வாழ உம்மை மன்றாடுகிறோம்.

2. ஒன்றிணைக்கும் வேந்தனே இறைவா, படிப்பறிவில்லாத மீன்பிடிக்கும் பாமரனான புனித பேதுருவையும் கற்றுத்தேர்ந்த ஆசிரியனான புனித பவுலையும் திருஅவையின் தூண்களாக நிறுத்தி இயேசுவின் பார்வையின் அனைவரும் சமம் என்ற மனநிலையை நாங்கள் உணர்ந்து வாழ வேண்டிய வரத்தை அருள உம்மை மன்றாடுகிறோம்.

3. மக்களின் நலன் காக்கும் மாபரனே இறைவா, இயற்கை சீற்றங்களினால் வாழ வதங்கும் உடல்நலன் காக்கப்படவும், புதிய நோய் தொற்றுகள் ஏற்படாவண்ணமும், தன்னலம் கருதாமல் உழைக்கும் பல நல்ல புதிய பொறுப்பாளர்கள் தோன்றவும், விவசாயக் காக்கவும், ஏழைஎளிய மக்கள் துன்பத்திலிருந்து விடுபடவும் உம்மை மன்றாடுகிறோம்.

## 30.06.2024 பொதுக்காலம் 13ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. சா.ஞா. 1: 13-15, 2:23-24 II. 2கொரி. 8: 7,9,13-15 மாற்கு 5: 21-43

இறையேசுவின் பிரியமான சகோதர சகோதரிகளே, பொதுக்காலம் 13ம் ஞாயிறு திருப்பலியில் பங்கேற்க திருஅவை உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றது. இன்றைய முதல் வாசகத்தில், சாவைக் கடவுள் உண்டாக்கவில்லை, வாழ்வோரின் அழிவில் அவர் அகமகிழ்வதில்லை. கடவுள் தாம் படைத்த உலகை பராமரிக்கிறார். தன்னுடைய சாயலாக படைக்கப்பட்ட மனிதர் சாகாமல் வாழ்வதையே கடவுள் விரும்புகிறார். சாத்தான் அதை தடுத்து மனிதனை சாகடிக்க முயற்சி செய்கிறான். வாழ்வு கடவுள் வழியாக வந்தது. சாவு சாத்தான் வழியாக வந்தது என தெளிவுப்பட அறிகிறோம். இரண்டாம் வாசகத்தில் மக்கள் மீட்பு பெறவேண்டும் என்பதற்காக இயேசு தம்மையே முழுவதுமாக கையளித்தார். அந்த மீட்பு பேசுவதிலும், சிந்திப்பதிலும், நம்பிக்கையுடன் வாழ்வதிலும், ஒற்றுமையில் வளரவும் போன்ற காரியங்களில் வெளிப்பட புனித பவுல் தன் மடல் மூலம் அறிவுறுத்துகிறார்.

இன்றைய நற்செய்தியில் நம்பிக்கை மூலம் இரு புதுமைகள் நடக்கின்றன. **ஒன்று** இரத்தப்போக்குடைய பெண் குணமாதல், **இரண்டு** தொழுகைக் கூடத்தலைவர் யாயீர் மகள் உயிர்பெறுதல். இங்கு இரத்தப்போக்குடைய பெண்ணின் உறுதியான நம்பிக்கை அவளைக் குணப்படுத்துகிறது. சமுதாயத்தால் ஒதுக்கப்பட்ட அந்தப் பெண்ணும் குணம்பெற்று சமுதாயத்துடனான தனது உறவை புதுப்பித்துக்கொள்கிறார். பிறரால் ஒதுக்கப்பட்டு ஓரம் தள்ளப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய

இயேசுவின் பாதையில் அடியெடுத்து வைப்போம். அடுத்து யாயீர் நம்பிக்கையுடன் தனது மகள் உயிர்பெற இயேசுவிடம் வருகிறார். நம்மை வாழவைக்கும் கடவுள் சாவை விரட்டுகிறார். இதைத்தான் இந்த இரண்டாம் புதுமையில் பார்க்கிறோம். இறைவனில் நம் இதயம் மகிழும்போது சாவு நம்மைவிட்டு பயந்து ஓடிவிடும். சாவை வெல்ல இத்திருப்பலி வழியாக நம்பிக்கையின் திருப்பயணிகளாக இறைவனோடு இறைவனில் இணைந்தே பயணிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தூய உள்ளத்தாருக்கு துணையாய் இருப்பவரே, திருஅவையிலுள்ள திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் இறைநம்பிக்கையாளர்கள் அனுதினமும் செபத்திலும், பிறருக்கு உதவி செய்வதிலும் இயேசுவின் மனநிலை பெற்றவர்களாக வாழ வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. எம்பாதைக்குஒளியாகவும்வழியாகவும்அமைந்தஇறைவா,இப்பொழுது இந்தியத் திருநாட்டை அளுகை செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் நாட்டையும், நாட்டிலுள்ள மக்களையும், மதம், இனம், மொழி பாகுபாடின்றி வழிநடத்திச்செல்லும் பாதைக்கு நீர் ஒளியாக இருந்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. பரிவன்புமிக்கத் தந்தையே எம் இறைவா, இன்றைய இளையத் தலைமுறையினர் இறையரசின் விழுமியங்களை தங்களுக்குள் பெற்று இச்சமுதாயத்திற்கு புனிதர்களைப்போல் முன்மாதிரியான நல்வாழ்வு வாழ்ந்திடவும், இரக்கத்தைக் காட்டும் நல்லவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. துன்பப்படுவோருக்கு துயர்துடைக்கும் எம் இறைவா, அன்று நம்பிக்கையோடு உம்மிடம் வந்து குணம் பெற்றவர்களைப் போன்று இக்காலக் கட்டத்திலும் பலவிதமான நோயினாலும், கஷ்டத்தினாலும் துன்புறுவோருக்கு நீரே துணைனின்று துயர்துடைக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி 2: நம்பிக்கையில் வளர...

## உலகை ஆளும் இயேசுவின் இருதயம்

திரு. பி. விக்டர்

நாம் வாழும் இவ்வுலகில் மனிதனின் உடல் வாழவேண்டுமானால், அதாவது நாம் உயிரோடு இருக்க வேண்டுமானால், அது இயேசுவின் இருதயத்தால் இயக்கப்பட வேண்டும். வேறுவிதத்தில் சொல்வதென்றால், நாம் கடவுளின் பிள்ளைகளாக வாழ வேண்டுமானால், விண்ணரசிற்கு உரியவராக மாறவேண்டுமானால், உலக முடிவில் நடக்கவிருக்கும் நமக்கான நீதி தீர்ப்பில் தண்டிக்கப்படாமல் இருக்க வேண்டுமானால், உலகத் தோற்ற முதல் உங்களுக்கென ஆயத்தப்படுத்தப்பட்டுள்ள

இடத்திற்கு வாருங்கள் என்று விண்ணகத் தந்தையால் வரவேற்கப்பட வேண்டுமானால் நாம் வாழுகின்ற இவ்வுலகில் இயேசுவின் இருதயத்தால் நாம் ஆளப்பட வேண்டும். ஏன் நாம் வாழும் இந்த உலகம், "உலகம்" என்று நாம் இங்கு குறிப்பிடுவது, உலகிலுள்ள அனைத்தும் இயேசுவின் இருதயத்தின் ஆளுகைக்குட்பட்டு இருக்க வேண்டும்? அந்த இயேசுவின் இருதயத்தின் சிறப்புகள் என்ன?

இயேசுவின் இருதயம் அன்பினால் பற்றியெரியும் இருதயம். அந்த அன்புக்கு எல்லையில்லை. அது ஆழம், அகலம், நீளம், உயரம் என எல்லைகள் வரையறுக்க முடியாத அன்பு. நமது அறிவுக்கு எட்டாத இந்த அன்பை அறிந்துக்கொள்ளும் ஆற்றலை நாம் பெற வேண்டும் (எபே. 3:18) என திருவிவிலியம் நமக்குக் கற்பிக்கிறது. பற்றியெரிகிற இந்த அன்பு யாரைப் பற்றிக்கொள்கிறதோ, அவர்கள் இந்த அன்பினால் ஆட்கொள்ளப்படுகிறார்கள். இயேசுவின் ஆளுகைக்கு உள்ளாகிறார்கள். அதுமுதல் அவர்களது வாழ்வு மாறுகிறது. அது தங்களுக்காக வாழ்ந்தவர்கள் தற்பொழுது இயேசுவுக்காக, இந்த சமுதாயத்தில் உள்ள கடவுளின் மக்களுக்காக வாழத் தொடங்குகிறார்கள். இந்த மாற்றம்தான் "கொல்கத்தா" நகரில் வாழ்ந்து புனிதையாக மரித்த புனித அன்னை தெரசாளையும் பற்றிக்கொண்டது. முன்பு தான் வாழ்ந்த "கொல்கத்தா" நகரில் பிறந்த அனாதைக் குழந்தைகளும், ஆதரவற்ற குழந்தைகளும், ஊனமுற்ற சிறார்களும், நோய்வாய்ப்பட்டு பராமரிப்பின்றி இருந்தவர்களும் இப்பொழுது இயேசுக்களாகத் தெரிந்தார்கள். அதனால்தான் புனித அன்னை தெரேசா அவர்களும் ஓடி ஓடி பணிவிடை செய்தார்.

அன்னை இந்த உலகைவிட்டுச் சென்றாலும், அவரது உடன் உழைப்பாளர்கள் சுமார் 45,000பேர், 130 நாடுகளில் இயேசுவின் இருதயத்திலிருந்து வழிந்தோடும் அன்பை அனைவருக்கும் வாரிவழங்கி வருகிறார்கள். நமக்காகப் பற்றியெரியும் இயேசுவின் இந்த அன்பு, நாம் நல்லவர்கள் என்பதற்காக அல்ல, மாறாக, நாம் பாவிகளாய் இருந்தபோதே நமக்காக இயேசுவை சிலுவையில் மரிக்கச் செய்தது. நமது பாவங்களுக்காகவும் அக்கிரமங்களுக்காகவும் இயேசுவை மரிக்கச் செய்து தமது அன்பு எத்தகையது என்பதை நமக்கு விளங்கச் செய்தார் (உரோ. 5:8). இயேசுவின் இருதயம் அன்பினால் மட்டும் பற்றியெரியவில்லை, அது அவரது இரக்கத்தினால் நிரம்பி வழிகிறது. அதனால்தான் இயேசு, "பலியை அல்ல இரக்கத்தை விரும்புகிறேன்" (மத் 9:13) என்றார். தனது இரக்கத்தை நமக்கு கற்றுக்கொடுக்க விரும்பின இயேசு, "நல்ல சமாரியன்" கதையை மக்களுக்கு எடுத்துரைத்தார். அந்தக் கதையில் தனது இரக்கச் செயலை வெளிப்படுத்திய "நல்ல சமாரியனை" இயேசு பாராட்டுகிறார் (லூக். 10:37). இயேசு நமக்குச் சொன்ன காணாமல் போன "காசு" காணாமல் போன ஆடு, மற்றும் மனந்திருந்திய மைந்தன் கதைகளில் தாம் எவ்வாறு இரக்கமுள்ளவராய்

செயல்பட்டார் என்பதை நயம்பட எடுத்துரைத்தார் (லூக்.15). ஏனெனில் இயேசு இரக்கமில்லாதவர்களைத் தேடியே வந்துள்ளார் (லூக். 19:10). இயேசுவின் காலத்தில் இரக்கமிகு இறைவனாக இயேசுவில் வெளிப்பட்டவர். அதனாலேயே "மனம்மாறுங்கள்" என்று எல்லோருக்கும் அழைப்பு விடுக்கிறார். விபச்சாரத்தில் பிடிப்பட்ட பெண்ணை தனது இரக்கமிகு இருதயத்தால் மன்னித்து அனுப்புகிறார், தொழுநோயாளரையும் தொட்டு குணப்படுத்தினார். தனக்கென இருந்த ஒரு மகனையும் சாகக் கொடுத்து அடக்கம் செய்ய புறப்பட்டு வந்த விதவைத் தாயின் கண்ணீரைத் துடைத்தார். இயேசுவின் இருதயத்திலிருந்து வழிந்தோடும் இரக்கத்தின் ஆளுகைக்கு நம்மை உட்படுத்திக்கொண்டு இறைவனின் திருவுளம் நிறைவேறச் செய்து வாழ முயல்வோம்.

இயேசுவின் இருதயத்திலிருந்து பொங்கி வழிகிற மற்றொரு இயல்பு "மன்னிப்பு" ஆகும். இயேசுவின் இருதயம் நமது குற்றங்களை மன்னிக்கிற இருதயமாக, நமது பாவங்களை மறக்கிற இருதயமாக, அவற்றை மறுபடி நினைவு கூறாத இருதயமாக இருக்கிறது. நம் குற்றங்களை மன்னிக்கிற ஆண்டவர், நமக்கு எதிராக பிறர் நமக்குச் செய்யும் குற்றங்களை நாம் மன்னிக்க வேண்டுமென்று விரும்புகிறார். நாம் எவ்வாறு பிறரை மன்னிக்கவேண்டுமென வினவியபோது, "ஏழு முறையல்ல, எழுபது முறை மன்னிக்க வேண்டுமென்று இயேசு நமக்கு கற்றுத்தந்தார் (மத். 18:22). அதன் உட்பொருள் என்னவென்றால் "அளவில்லாமல்" மன்னிக்க வேண்டும் என்பதுதான். கடவுளுக்கு பலி செலுத்துவதைவிட "மன்னித்தல்" அவசியம் என இயேசு வலியுறுத்துகிறார். இதைச் சொல்வது எளிது ஆனால் செய்வது கடினம் என நாம் சொல்லலாம். ஆனால் இயேசு சிலுவையில் தொங்கிய வேளையில் "தந்தையே இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாமல் செய்கிறார்கள்" என்று சொல்லி, தாம் போதித்த மன்னிப்பை செயலில் செய்துக் காட்டினார். இயேசுவின் திருஇருதயத்திலிருந்து பொங்கிவரும் அன்பையும், இரக்கத்தையும், மன்னிப்பையும் வெளிப்படுத்தி அவர் இருதயத்தால் ஆளுப்படுகிறவர்களாக வாழ்வோம்.

இந்த உலகை ஆளுகிற இயேசுவின் இருதயத்தில் அவரது அன்பு, இரக்கம், மன்னிப்பு இவற்றோடு அவரது மனத்தாழ்மையும் நிரம்பி வழிகிறது. கடவுள் வடிவில் விளங்கிய இயேசு, கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதாக கருதாமல், தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். அதுமட்டுமல்ல, சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார். இவ்வாறான மனித தாழ்மையில் நிரம்பின இயேசு, என்னிடம் இந்த மனத்தாழ்மையைக் கற்றுக் கொள்ளுங்கள் அப்பொழுது உங்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்கிறார்.

இயேசுவிடம் பணிவு இருந்தது, பெருமை இல்லை, தாழ்ச்சி உள்ளவர்களுக்கு கடவுள் பேரன்பை காட்டுகிறார். இந்த மனத்தாழ்மைதான் அன்னை தெரசாளை, புனித தொன் போஸ்கோவை பணி செய்ய வைத்தது, இன்னும் பலரை பணிசெய்ய வைத்துக் கொண்டிருக்கிறது, இயேசுவின் மனத்தாழ்மையை நமதாக்கிக் கொள்வோம். அவரது திருஇருதயத்தால் ஆளப்படுவதற்கு நம்மை விட்டுக் கொடுப்போம். இந்த உலகை ஆளும் இயேசுவின் இருதயம் அவரது சமாதானத்தினால் பொங்கி வழிகிறது. மனிதரை மீட்பதற்கு இந்த உலகில் பிறந்த இயேசுவின் மீட்பு நிகழ்ச்சியின் காரணம் சமாதானம் நல்லுறவு ஆகும். அவரது பிறப்பு உண்மையானவருக்கு மாட்சியாகவும் உலகில் உள்ள நல்மனதுடையோருக்கு சமாதானம் தருவதாகவும் உள்ளது. இயேசு தருகின்ற சமாதானம் இந்த உலகம் தருகின்ற சமாதானம் போன்றதல்ல.

மாறாக இயேசு தன்னுடைய சமாதானத்தை தருகின்றார். அதாவது தனக்கும் விண்ணகத் தந்தைக்கும் இடையேயான உறவின் நெருக்கத்தை, சமாதானத்தை நமக்கு தருகிறார். இயேசு நற்செய்தி பணிசெய்யத் தனது சீடர்களை அனுப்பியபோது "ஒரு வீட்டிற்குள் நுழைந்தவுடன் இந்த வீட்டிற்கு சமாதானம்" என்று சொல்லச் சொன்னார் (லூக். 10:5). இயேசு உயிர்த்தப் பிறகும் தனது சீடர்களுக்குச் சொன்ன முதல் வாழ்த்து "உங்களுக்குச் சமாதானம்" என்பதே. இயேசுவின் திருஇருதயத்தால் ஆளப்படுகிற நாம் அவரது அன்பினாலும், இரக்கத்தினாலும், மன்னிப்பினாலும், மனத்தாழ்ச்சியினாலும் அவர் தருகின்ற சமாதானத்தினாலும் நிரம்பி வாழும் நாம், பெற்ற சமாதானத்தை பிறரோடு பகிர்ந்து, ஒன்றுபட்டவர்களாக வாழ முயல்வோம்.

## புனித திருமுழுக்கு யோவான் வாழ்வு தரும் பாடம்

திரு. டே. ஆக்னல் ஜோஸ்

கத்தோலிக்கத் திருஅவை ஜூன் 24ந்தேதி புனித திருமுழுக்கு யோவானின் பிறப்பு விழாவைச் சிறப்பிக்கின்றது. ஆண்டவர் இயேசுவோடு நெருங்கியத் தொடர்புடைய புனிதரான இவரை "பாலைநிலக் குரல்" என விவிலியம் அறிமுகம் செய்கிறது. "மெசியாவின் முன்னோடி" என்று வரலாறு குறிப்பிடும் இவரே. "இயேசுவே மெசியா" என இந்த உலகிற்கு முதலில் சுட்டிக் காட்டியவர். "பெண்ணிடம் பிறந்தவர்களுள் திருமுழுக்கு யோவானை விடச் சிறந்தவர் யாருமில்லை" என்று இயேசுவே இவரைப் புகழ்ந்துக் கூறியுள்ளார். இயேசுவின் பிறப்பு கன்னி மரியாவுக்கு அறிவிக்கப் படுவதற்கு ஆறு மாதங்கள் முன்பு திருமுழுக்கு யோவானின் பிறப்பு செக்கரியாவுக்கு அறிவிக்கப்பட்டது. "அவர் எலியாவின் உளப்பாங்கையும் வல்லமையையும் உடையவராய் ஆண்டவருக்கு முன் செல்வார். அவருக்கு ஏற்புடைய ஒரு மக்களினத்தை ஆயத்தம் செய்வார்" என்று வானதூதர் கூறினார். கடவுளின் வார்த்தையில் நம்பிக்கை கொள்ளாமல் பேச்சிழந்த

செக்கரியா, தமது மகன் யோவானுக்குப் பெயரிட்ட நாளில் மீண்டும் பேசும் வரம் பெற்றார் என்று அறிகிறோம்.

ஆண்டவர் இயேசுவின் உறவினர் மற்றும் மூத்த சகோதரர் என்ற முறையில், சிறு வயதிலேயே இருவருக்கும் நல்ல அறிமுகம் இருந்தது. அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து ஓடியாடி விளையாடியிருக்க வேண்டும். யோவானின் பெற்றோர்கள் முதிர்ந்த வயதினராய் இருந்ததால், இவர் சிறுவனாக இருந்தபோதே அவர்கள் இறந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. அதன் பிறகு, மக்கள் சமூகத்தில் இருந்து விலகி வாழ்ந்த எஸ்ஸேனியர் சமூகத்தில் இவர் தம்மை இணைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது. திருமுழுக்கு என்பது எஸ்ஸேனியர் சமூகத்தோடு தொடர்புள்ளச் சடங்காக இருந்ததால் ஆய்வாளர்கள் இவ்வாறு கணிக்கின்றனர். பொதுவாக எஸ்ஸேனியர் மக்கள் சமூகத்திலிருந்து விலக்கிக் கொண்டு, தூய வாழ்வு வாழ்ந்த தங்கள் நடுவிலிருந்தே மெசியா தோன்றுவார் என்ற நம்பிக்கையுடன் வாழ்ந்தனர். எஸ்ஸேனியர் சமூகத்தில் இருந்து வெளியே வந்து பொது மக்களின் மனமாற்றத்திற்கு அழைப்பு விடுத்த முதல் நபர் யோவானே என்று கூறப்படுகிறது. இவர் இறைவாக்கினர்களில் இறுதியானவராக அறியப்படுகிறார்.

ஆண்டவர் இயேசுவின் இறையாட்சி பணி தொடங்குவதற்கு சிறிது காலம் முன்பாக, அவரது வருகைக்காக யோவான் மக்களைத் தயாரித்தார். யோவானின் சீடர்களும் மக்களும் இவரே வரவிருந்த மெசியா என்று நினைக்கத் தொடங்கினர். ஆனால், தாம் மெசியா அல்லர் என்றும், தமக்குப் பின் வரவிருக்கிற அவரது மிதியடி வாரை அவிழ்க்கக்கூடத் தமக்குத் தகுதியில்லை என்றும் இவர் தெளிவுப்படுத்தினார். இயேசு யோர்தான் நதிக்கு வந்து இவரிடம் திருமுழுக்கு பெற்றபோது தூய ஆவி இறங்கி வந்தார். இயேசுவே மெசியா என்பதை அறிந்த யோவான், "இவரே உலகின் பாவங்களைப் போக்கும் கடவுளின் ஆட்டுக்குட்டி" என பறைசாற்றினார். தமது சீடர்கள் இருவரையும் இயேசுவைப் பின்பற்றுமாறு அனுப்பி வைத்தார். இயேசுவின் வருகையை முன்னறிவித்து, அவர் வந்தபோது அவரே மெசியா என்று சுட்டிக்காட்டும் பேறு யோவானுக்கு கிடைத்தது. இயேசுவின் உறவுமுறை அண்ணனாக யோவான் இருந்தாலும், அவர் கடவுளால் அனுப்பப் பெற்றவர் என்று உணர்ந்து தம்மைத் தாழ்த்திக் கொண்டார்.

இறைவாக்கினர் எலியாவின் மறுவடிவமாகத் திகழ்ந்த திருமுழுக்கு யோவான் தீயோரைக் கடுமையாகச் சாடினார். வெளிவேடத்துடன் செயல்பட்ட மக்களிடம், "விரியன் பாம்புக் குட்டிகளே, வரவிருக்கும் சினத்தில் இருந்து தப்பிக்க முடியும் என்று உங்களிடம் சொன்னவர் யார்?" என்று கேட்டு, உடனே மனந்திரும்ப வலியுறுத்துகிறார். ஏரோது

அரசன் தனது சகோதரன் மனைவியை முறைகேடாக வைத்திருந்ததை வன்மையாகக் கண்டித்ததால், இவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். தமது உயிரே போகும் நிலை இருந்தாலும், கடவுளின் திட்டத்துக்கு எதிரானச் செயலை யார் செய்தாலும் குற்றமே என்றத் தெளிவான மனநிலை யோவானிடம் இருந்தது. இவர் கடவுளுக்காகத் தமது வாழ்வை முற்றிலும் அர்ப்பணித்து, வெட்டுக்கிளி மற்றும் காட்டுத் தேனை மட்டுமே உண்டு எளிய வாழ்வு வாழ்ந்தவர். ஒட்டக முடியாலான உடையை அணிந்து கொண்டு, ஆடம்பரத்தையும் அட்டூழியங்களையும் தன்னந்தனியாக எதிர்த்து நின்றத் துணிவு மிகுந்த ஓர் இறைவாக்கினராக யோவான் விளங்கினார்.

யோவான் சமூக அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தார், எளிய மக்கள் சந்தித்தத் துன்பங்களைக் களைந்திட நினைத்தார், மெசியாவின் அரசில் தீயோர் பெறும் தண்டனை குறித்து எச்சரித்தார். வானதூதர் முன்னறிவித்தவாறே, இவர் தூய ஆவியார் நிரப்பப்பட்ட ஓர் இறைவாக்கினராய் திகழ்ந்து, கீழ்ப்படியாத மக்களும் நேர்மையாளர்களின் மனநிலையைப் பெறச் செய்தார். இவர் தூய உள்ளத்துடன் வாழ்ந்ததால், இயேசுவே மெசியா என்பதைக் கண்டுணர்ந்து மக்களுக்கு வெளிப்படுத்தும் பேறுபெற்றார். திருமுழுக்கு யோவானின் வாழ்வு நமக்கு பல பாடங்களைக் கற்பிக்கிறது. முதலில் நாம் அனைவரும் கடவுளால் பெயர் சொல்லி அழைக்கப்பட்டவர்கள் என்பதை உணர்ந்து, அவரது திட்டத்திற்குப் பணிந்து நடக்க வேண்டும். அடுத்து, உண்மை கடவுளிடம் இருந்து விலகி வாழுகின்ற மக்களை, அவரிடம் கொண்டு வருவதற்கான முயற்சி செய்ய வேண்டும். இறுதியாக, இந்த சமூகத்தில் ஏமாற்றிப் பிழைக்கும் தீயோரின் கைகளில் இருந்து, எளியோரை விடுவிக்க நம்மால் இயன்ற விதத்தில் போராட வேண்டும்.

நமது உயிரையே இழக்க வேண்டிய நிலை வந்தாலும் உண்மை மற்றும் நீதியின் பக்கம் நாம் நிற்க வேண்டும் என்பதை யோவான் நமக்கு கற்பிக்கிறார். எத்தகையச் சூழலிலும் நாம் கடவுளுக்குச் சான்று பகர்வோராகத் திகழ வேண்டும் என்பது இவரது வாழ்வு தருகின்ற மற்றொரு பாடம். ஆடம்பரத்தைப் புறக்கணித்து எளிமையாக வாழ்ந்தால் நாமும் கடவுளின் பாராட்டைப் பெறுவோம். யோவான் சிறையில் இருந்தபோது, இயேசுதான் வரவிருந்த மெசியாவா என்பதை உறுதிப்படுத்த தமது சீடர்களை அனுப்பினார். இவ்வாறு தமது சான்றினை நம்பிய மக்கள் ஏமாற்றம் அடைந்துவிடக் கூடாது என்னும் தெளிந்தச் சிந்தனையோடு இவர் செயல்பட்டதை காண்கிறோம். கடவுளுக்குச் சான்று பகர்வது மட்டுமன்று, அதை உறுதி செய்வதும் நமது கடமை என்பதை இவர் நமக்கு கற்றுத் தருகிறார். புனித திருமுழுக்கு யோவானைப் பின்பற்றி ஆண்டவரின் உண்மை சாட்சிகளாக வாழ முயற்சிப்போம்.

## அருளாளர் பிரான்சிஸ் கெசியாண்டு மற்றும் குழுவின் தியாகம்

திரு. ஜான் அலெக்சாண்டர்

இம்மாதத்தின் சவால் மற்றும் வெற்றிக்கு சொந்தக்காரர்களான புனிதர்கள் என்று சொன்னால், அது அருளாளர் பிரான்சிஸ் கெசி மற்றும் அவரது 4 நண்பர்களை மட்டும் குறிக்கும். இறை நம்பிக்கையை வாழ்வதில் ஒருவருக்கொருவர் எவ்வாறு ஆதரவளித்தார்கள், மாற்றத்தை ஏற்படுத்த எவ்வாறு ஒன்றாக பணி செய்தார்கள் என்பதை பார்க்கின்ற போது நமக்கு வியப்பாக இருக்கும். ஆகவே தான் அவர்கள் கத்தோலிக்க பதின்ம வயதினருக்கு மிக சிறந்த முன்மாதிரியாக இருக்கிறார்கள். சவால் மற்றும் வெற்றியில், குழு அடிப்படையிலான செயல்பாடுகள் மற்றும் நமது நம்பிக்கையைப் பற்றி ஒன்றாக புரிந்துகொள்வது சிறப்பான அம்சங்களில் ஒன்றாகும். கடினமான தருணங்களில் கூட, பிரான்சிஸும் அவரது நண்பர்களும் ஒருவருக்கொருவர் நன்கு புரிந்தவர்களாக இருந்தனர். இரண்டாம் உலகப் போரின் துவக்கத்தில், 1939ல் ஹிட்லர் போலந்து மீது படையெடுத்தார். போஸ்னானில் உள்ள சலேசிய இளைஞர் மன்றம் ஆக்கிரமிக்கப்பட்டு, ஜெர்மானிய வீரர்களின் முகாம்களாக மாற்றப்பட்டது. அங்கு தங்கியிருந்த இளையோர் நகரத்திற்கு வெளியே உள்ள காட்டு பகுதிகளிலும் தோட்டங்களிலும் ஒன்று கூடும் நிலை இருந்து வந்தது.

1940ல் பிரான்சிஸ் கெசி மற்றும் அவரது இளையோர் மன்ற 4 நண்பர்களும் கைது செய்யப்பட்டு சட்டவிரோத மத அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டனர். அவர்கள் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து அவர்கள் பல்வேறு சிறைகளுக்கு மாற்றப்பட்டனர். இருந்த போதிலும் பிரான்சிஸ் மற்றும் அவரது நண்பர்கள் எப்போதும் ஒன்றாகவே இருந்தனர். இது அதிக நாட்கள் நீடிக்க வாய்ப்பில்லாமல் போனது. சிறையில் அவர்கள் தொடர்ந்து செபித்தனர். செபமாலை, சகாய அன்னைக்கு நவநாட்கள், காலை மற்றும் மாலை மன்றாட்டு மாலைகள் என பக்தியோடு நாட்களை கழித்தனர். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் சிறையில் அவர்கள் தங்கள் அறையில் திருவழிபாட்டு விழாக்களையும் கொண்டாடினர். அவர்களது இறை பற்றும் நம்பிக்கையும் என்றும் தளர வில்லை. இறுதிவரை நம்பகமான திருத்தூதுவ வாழ்வின் சாட்சிகளாக இருந்தனர். அவ்வப்போது அவர்கள் ரகசியமாக அனுப்பும் செய்திகள் வழியாக தங்கள் குடும்பத்தினருடன் தொடர்பில் இருக்க முயன்றனர். மீண்டும் போஸ்னானுக்கு அவர்கள் அனுப்பப்பட்டு, தேசத்துரோக வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டு ஆகஸ்ட் 24ம் நாள் 1942ல் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. ஜூன் 6, 1999ல் அப்போதைய திருத்தந்தை 2ம் ஜான் பால் அவர்களால் திருஅவையில் அருளாளர் நிலைக்கு இந்த ஐந்து சலேசிய மாணவர்கள் உயர்த்தப்பட்டனர்.

**பிரான்சிஸ் கெசி :** 1920ல் பிறந்த இவர், ஆக்கிரமிப்பின் போது அவருக்கு ஒரு தொழிற்சாலையில் வேலை கிடைத்தது. தனது ஓய்வு நேரத்தை சலேசிய இளையோர் மன்றத்தில் செலவிட்டு, அதன் செயல்பாடுகளை வழிநடத்தினார். பிறருக்கு உதவ எப்போதும் தயாராக இருந்தார். தினமும் செபமாலை, திருப்பலியில் நற்கருணை பெறுதல் என இறை பராமரிப்பில் தளரா நம்பிக்கை வைத்திருந்தார். இறக்கும்போது அவருக்கு வயது 22.

**எட்வட் க்ளினிக் :** 1919ல் பிறந்தவர். பயந்த சுபாவம் ஆனால் இளையோர் மன்றத்திற்கு வந்தவுடன் மிகவும் கலகலப்பானவராக மாறினார். மிகச்சிறந்த பொறுப்பான மாணவரான இவர் இறக்கும்போது வயது 23.

**ஜரோக்னிவ் வோஜ்சிச்சோவ்ஸ்கி :** 1922ல் பிறந்தவர். சிறந்த தொலைநோக்கு சிந்தனையுள்ளவர். எதையும் எளிதில் புரிந்துகொள்ள முயற்சிப்பதற்காக விஷயங்களைப் பற்றிய ஒட்டுமொத்த பார்வையைப் பெற முயற்சிப்பார். சிறந்த வழிகாட்டியாக தலைவராக இருந்தார். தனக்கே உரித்தான நகைச்சுவை உணர்வுக்காக பெரிதும் போற்றப்பட்டவர். இறக்கும்போது அவருக்கு வயது 20.

**செஸ்லாவ் ஜோஸ்வியாக் :** 1919ல் பிறந்தவர். சற்று சூடான குணம் கொண்டவரானாலும், தனிப்பட்ட சிந்தனை கொண்டு செயல்படுவார். ஆற்றல் நிறைந்தவர், எந்த தியாகத்தையும் ஏற்க தயாராக இருப்பவர். நேர்மறையான வாழ்வுமுறையை கொண்டிருந்தவர். "நல்ல குணமும் உள்ளமும் கொண்ட பனித்துளியை போன்ற தூய்மையான ஆன்மாவை கொண்டவர்" என்று அவருடன் பழகியவர்களில் ஒருவர் எழுதியிருந்தார். இறக்கும்போது அவருக்கு வயது 21.

**எட்வட் காஸ்மியர்ஸ்கி :** 1919ல் பிறந்தவர். தீவிரத்தன்மை, விவேகம் மற்றும் நேர்மைக்காக அறியப்பட்டவர். இளையோர் மன்றத்தில் அவர் தனது இசை திறமையை வளர்த்துக் கொண்டார். நன்கு சிந்திக்கும் ஆற்றலும் வாழ்வில் முதிர்ச்சிப்பெற்ற ஆழமான முடிவுகளை எடுத்துரைப்பவராகவும் திகழ்ந்தார். சிறையில் மூத்த கைதிகள்மீது மிகுந்த அன்பு காட்டினார். தம்மை துன்புறுத்தியவர்கள் மீது எந்த வெறுப்பும் இல்லாமல் விரோதமும் இல்லாமல் அன்போடு ஏற்று மகிழ்ந்தார். இறக்கும்போது அவருக்கு வயது 22.

**இறுதியாக :** இந்த 5 இளைஞர்கள் இறைபற்றிலும் நம்பிக்கையிலும் மற்றும் சலேசிய ஆன்மீக உணர்விலும் வாழ்ந்தவர்கள் என்பதாலேயே அவர்கள் சிறை பிடிக்கப்பட்டனர். செபமாலை, தொன் போஸ்கோ மற்றும் சகாய அன்னை நவநாட்கள் அனுசரிப்பது, நல்ல ஒப்புரவு பெற்று தினமும் நற்கருணை உட்கொண்டு செபிப்பது, பிறருக்காக உழைப்பது, உதவுவது,

தேவை ஏற்பட்டால் உயிரையே தியாகம் செய்வது என தங்கள் வாழ்வில் நிரூபித்தவர்கள். அவர்களது இறைப்பற்று மற்றும் இறை பராமரிப்பின் மீதுள்ள ஆழ்ந்த நம்பிக்கை ஒருபோதும் தளரவில்லை. அதுவே அவர்களை இறுதிவரை நம்பகமான மறைசாட்சிகளாக உயர்த்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

## திருஅவைச் செய்திகள்

திரு. சாண்டோ

### இராணுவத் தீர்வுகள் போர்களை முடிவுக்குக் கொண்டுவராது

போர்களை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியில் இராணுவ தீர்வுகள் பயன்தர வாய்ப்பில்லை. ஆதலால் வேறுபாதைகளைத் தேடவேண்டுமென்றும், அணு ஆயுதங்களின் ஆபத்துகள் மனித குலத்திற்கு பெரும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்தி வருகின்றன என்றும் எச்சரித்துள்ளார் பேராயர் Gabriele Caccia. தற்போது ஆயுத வர்த்தகத்திற்காக அதிகம் செலவிடப்படுவதைச் சுட்டிக்காட்டியுள்ள பேராயர் Caccia அவர்கள், அத்தகைய முதலீடுகள் சமூக பொருளாதார மேம்பாடு மற்றும் மோதல்களைத் தடுக்கும் திட்டங்களுக்குச் சிறப்பாகச் செலவிடப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். மேலும் நம்பிக்கை மற்றும் தூதரக உறவுக்கான கட்டமைப்புகள் மற்றும் ஒத்துழைப்பை மீட்டெடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து கூறியுள்ள பேராயர் Caccia அவர்கள் அணு ஆயுதங்களின் ஆபத்துகள் குறித்துத் திருஅவை கொண்டுள்ள பெரும் அக்கறையும் அந்நேர்காணலில் சுட்டிக்காட்டியுள்ளார்.

### கிறிஸ்தவ செவிலியர்கள் மேலதிகாரிகளால் ஊக்கப்படுத்தப்பட வேண்டும்

செவிலியர் ஒருவர், ஓர் உயிரைக் காப்பாற்ற ஒரு மருத்துவரைவிட அதிக முயற்சி செய்கிறார், நோயாளர்களுடன் தூய்மையான உறவை உருவாக்குகிறார், மேலும் சிறந்த முறையில் அவர்களைக் கவனித்துக் கொள்கிறார் அருள்சகோதரி அல்வினா. மே 12, ஞாயிறன்று, உலக செவிலியர் தினம், பாகிஸ்தானின் பைசலாபாத் மதீனா நகரிலுள்ள பங்குத்தளத்தில் கொண்டாடப்பட்ட வேளை, அதன் பங்குத்தந்தை காலித் ரஷீத் அசி அவர்கள், 16 செவிலியர்கள் மற்றும் 25 பேறுகால உதவியாளர்களையும், மக்களையும் குணப்படுத்துவதற்கான அவர்தம் உபகரணங்களையும் ஆசீர்வதித்ததாக உரைக்கின்றது ஆசிய செய்தி நிறுவனம்.

### பெருஜியா குழந்தைகளுக்கு நன்றி தெரிவித்த திருத்தந்தை

நீங்கள் எதிர்கொள்ளும் அனைத்து சவால்கள் மற்றும் துயரங்களில் தொடர்ந்து முன்னேறுங்கள் நோயின் இருளில் எப்போதும் ஒளியின் கதிரை கண்டுபிடியுங்கள், திருத்தந்தை பிரான்சிஸ். தான் உடல்நலக்குறைவால்

பாதிக்கப்பட்டிருந்தபோது, தம்முடன் அக்கறையும் நெருக்கமும் காட்டியதற்காக, இத்தாலியின் பெருஜியா மருத்துவமனையில் உள்ள குழந்தைகளுக்கு, கடிதம் ஒன்றில் நன்றி தெரிவித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். கடந்த ஏப்ரல் மாதம் 12ம் தேதி எழுதிய கடிதம் ஒன்றில், உலகெங்கிலும் உள்ள நோய்வாய்ப்பட்ட அனைத்து வயது குழந்தைகளையும் சிறப்பாகப் பராமரித்து வரும் அம்மருத்துவமனை நிர்வாகத்திற்குத் தான் பாராட்டுத் தெரிவித்திருந்ததையும் இக்கடிதத்தில் நினைவு கூர்ந்துள்ளார் திருத்தந்தை. மேலும் தனது பதில் கடிதத்தில் அவர்களும் அவர்களது பெற்றோருக்கும் அவர்களைக் கவனித்துக் கொள்ளும் அனைவருக்கும் தனது மனம்நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டுள்ள திருத்தந்தை அவர்கள் எதிர்கொள்ளும் அனைத்து சவால்கள் மற்றும் துயரங்களில் தொடர்ந்து முன்னேறுமாறு அவர்களை ஊக்குவித்துள்ளதுடன் "நோயின் இருளில் எப்போதும் ஒளியின் கதிரைக் கண்டுபிடிக்க" அவர்களை வலியுறுத்தியுள்ளார்.

## உக்ரைனின் கார்கில் பகுதியில் நிகழ்ந்த தாக்குதலில் 3 குழந்தைகள் காயம்

2022ம் ஆண்டு முதல் உக்ரைனில் நிகழ்ந்து வரும் தாக்குதல்களில் இதுவரை ஏறத்தாழ 2,000 குழந்தைகள் கொல்லப்பட்டு, காயமடைந்துள்ளனர், இந்தத் தாக்குதல் மிகவும் கொடியது என்றும், பொர்களில் குழந்தைகள் இலக்காகக் கொள்ளப்படக்கூடாத என்றும் விண்ணப்பித்துள்ளது. யுனிசெப் நிறுவனம்.

## சுடர் வாசகர் போட்டி - 110 சரியான விடைகள்

1. திருத்தந்தை பிரான்சிஸ்
2. புனித பீட்டர் ஜூலியன் எய்மர்ட்
3. காண்டர்பரி நகர்ப் புனித அகுஸ்தின்
4. புனித அருளப்பர், புனித அகுஸ்தினார், புனித நிக்கோலாஸ்
5. மெக்சிகோவின் குவாடலஜாரா மாகாணத்தில்
6. "யாவேயின் கொடை"
7. புனித அர்த்தனாசியுஸ்
8. செபமாலை
9. புனித பிரான்சிஸ் சலேசியார்
10. அன்னை மரியாள்
11. காசியா நகர் புனித ரீத்தா
12. "பிளவுப்பட்ட மெக்சிகோ மக்களுக்கு என் இரத்தம் அமைதியைக் கொண்டுவரும்"
13. பெந்தகோஸ்து
14. புனித யாக்கோபு
15. செபமாலை

### குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

Mrs. Jane Roseline Manonmani, Thanjavur

Sr. Fatima, Vellore

Mr. George Stephen, Villupuram

## சுடர் வாசகர் போட்டி - 111

1. பெருஜியா குழந்தைகளுக்கு திருத்தந்தை எதற்காக நன்றிக் கடிதம் எழுதினார்?
2. அரு. பிரான்சிஸ் கெசியாண்டுடன் இருந்த நண்பர்களின் பெயர் மற்றும் வயது என்ன?
3. புனித பவுல் எந்த இடத்தில் எப்படி இறந்தார்?
4. "விரியன் பாம்பு குட்டிகளே மனம் மாறுங்கள்" என்று போதித்த புனிதர் யார்?
5. ஞான பிரகாசியார் என்பவரின் மற்றொரு பெயர் என்ன?
6. பார்னபாவின் பழைய பெயர் என்ன?
7. கிறிஸ்துவா? அல்லது மற்ற தெய்வங்களா? என்ற கருத்தை எதிர்த்தவர் யார்?
8. தனது தத்துவமேதை உடையுடன் உரோமை வந்தடைந்த புனிதர் யார்?
9. மே 12 யாருடைய தினமாக கொண்டாடப்பட்டது?
10. "பாலைநிலக் குரல்" என்பது யார்?
11. "இனி மனிதர்களை பிடிப்பவனாய் இரு" யார் யாரிடம் கூறியது?
12. எதை சரிபடுத்த சபையில் சேர்ந்ததாக புனித அலோசியஸ் கொன்சாகா கூறுகிறார்?
13. புனித பர்னபா எந்த இடத்தில் எப்படி இறந்தார்?
14. "அன்பே உங்கள் வாழ்வுக்கு ஆணிவேரும், அடித்தளமுமாய் இருப்பதாக" விவிலியத்தில் எங்குள்ளது?
15. "பெத்லகேம்" என்பதன் பொருள் என்ன?


## தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ.100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

தீபகம்
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
தொலைப்பேசி: 044 - 26428162.

பெயர்: ..................................
முகவரி: ..................................
..................................
..................................
..................................

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

புனித தோமா இந்தியாவின் திருத்தூதர் பெருவிழா
புனித அந்தோனி மரிய சக்கரியா
பொதுக்காலம் 14ம் ஞாயிறு
அருளாளர் மரிய ரொமேரோ
பொதுக்காலம் 15ம் ஞாயிறு
கார்மேல் மலை புனித கன்னி மரியா
பொதுக்காலம் 16ம் ஞாயிறு
புனித மகதலா மரியா விழா
புனித ஷார்பல் மாக்லுப்
புனித யாக்கோபு திருத்தூதர் விழா
புனிதர்கள் சுவக்கின், அன்னா: புனித கன்னிமரியாவின் பெற்றோர்
பொதுக்காலம் 17ம் ஞாயிறு
புனிதர்கள் மார்த்தா, மரியா, லாசர்
லெயோலா நகர்ப் புனித இஞ்ஞாசியார்

### பகுதி 2: நம்பிக்கையில் வளர...

அருளாளர் மரிய ரொமேரோ - வாழ்வு தரும் பாடம்
மரியாவின் பெற்றோரை அறிவோம்
இந்தியாவின் திருத்தூதர் தோமா - சந்தேகத் தோமாவா? சான்று பகர்ந்த தோமாவா?
திருஅவைச் செய்திகள்

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை ஜூன் 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

# ஜூன் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | ச | புனித ஜஸ்டின் | யூதா 17: 20-25 | மாற்கு 11: 27-33 |
| 2 | **ஞா** | **கிறிஸ்துவின் தூய்மைமிகு திருவுடல் திரு இரத்தம் பெருவிழா** | I. விப. 24: 3-8<br>II. எபி. 9: 11-15 | மாற்கு 14:12-16.22-26 |
| 3 | தி | புனிதர்கள் சால்லஸ் லுவாங்காவும் தோழர்களும் | 2பேதுரு 1: 2-7 | மாற்கு 12: 1-12 |
| 4 | செ | | 2பேதுரு 3: 12-15,17-18 | மாற்கு 12: 13-17 |
| 5 | பு | புனித போனிப்பாஸ் | 2திமொ. 1: 13, 6-12 | மாற்கு 12: 18-27 |
| 6 | வி | புனித நார்பெர்ட் | 2திமொ. 2: 8-15 | மாற்கு 12: 28-34 |
| 7 | வெ | **இயேசுவின் தூய்மைமிகு இதயம் பெருவிழா** | I. ஓசே. 11:1,3-4,8-9<br>II. எபே. 3: 8-12,14-19 | யோவா. 19: 31-37 |
| 8 | ச | புனித கன்னிமரியாவின் மாசற்ற இதயம் மற்றும் புனித மரியம் தெரசியா | எசா. 61: 9-11 | லூக். 2: 41-51 |
| 9 | **ஞா** | **பொதுக்காலம் 10ம் ஞாயிறு** | I. தொ.நூ. 3: 9-15<br>II. 2கொரி. 4: 13-5:1 | மாற்கு 3: 20-25 |
| 10 | தி | | 1அர. 17: 1-6 | மத். 5: 1-12 |
| 11 | செ | புனித பர்னபா திருத்தூதர் | தி.ப. 11: 21-26, 13: 1-3 | மத். 5: 1-13 |
| 12 | பு | | 1அர. 18: 20-39 | மத். 5: 17-19 |
| 13 | வி | பதுவா நகர் புனித அந்தோணியார் | 1அர. 18: 41-46 | மத். 5: 20-26 |
| 14 | வெ | | 1அர. 19: 9,11-16 | மத். 5: 27-32 |
| 15 | ச | | 1அர. 19: 19-21 | மத். 5: 33-37 |
| 16 | **ஞா** | **பொதுக்காலம் 11ம் ஞாயிறு** | I. எசே. 17: 22-24<br>II. 2கொரி. 5: 6-10 | மாற்கு 4: 26-34 |
| 17 | தி | | 1அர. 21: 1-16 | மத். 5: 38-42 |
| 18 | செ | | 1அர. 21: 17-29 | மத். 5: 43-48 |
| 19 | பு | புனித ரோமுவால்டு, துறவு மடத்துத் தலைவர் | 2அர. 2:1,6-14 | மத். 6: 1-6. 16-18 |
| 20 | வி | | சீ. ஞா. 48: 1-15 | மத். 6: 7-15 |
| 21 | வெ | புனித அலோசியுஸ் கொன்சாகா | 2அர. 11: 1-4, 9-18,20 | மத். 6: 19-23 |
| 22 | ச | நோலா நகர் புனித பவுலினுஸ் | 2குறி. 24: 27-25 | மத். 6: 24-34 |
| 23 | **ஞா** | **பொதுக்காலம் 12ம் ஞாயிறு** | I. யோபு. 38: 1, 8-11<br>II. கொரி. 5: 14-17 | மாற்கு 4: 35-41 |
| 24 | தி | **புனித திருமுழுக்கு யோவானின் பிறப்பு பெருவிழா** | I. எசா. 49: 1-6<br>II. தி.ப.. 13: 22-26 | லூக். 1: 57-66, 80 |
| 25 | செ | | 2அர. 19:9-11,14-21,31-35.36 | மத். 7: 6,12-14 |
| 26 | பு | | 2அர. 22:8-13, 23: 1-3 | மத். 7: 15-20 |
| 27 | வி | அலெச்சாண்ட்ரியா நகர் புனித சிரில் | 2அர. 24: 8-17 | மத். 7: 21-29 |
| 28 | வெ | புனித இரனேயுஸ் | 2அர. 25: 1-12 | மத். 8: 1-4 |
| 29 | | **புனிதர்கள் பேதுரு, புவல் திருத்தூதர்கள் பெருவிழா** | I. தி.ப. 12: 1-11<br>II. 2திமொ. 4: 6-8.17-18 | மத். 16: 13-19 |
| 30 | | **பொதுக்காலம் 13ம் ஞாயிறு** | I. சா.ஞா. 1: 13-15, 2: 23-24<br>II. 2கொரி. 8: 7,9,13-15 | மாற்கு 5: 21-43 |

# தீபகம்


தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம்

வழங்கும்

TO SHARE THE LIGHT

## சிறார்களின் திருவிருந்துக்கான மறைக்கல்வி

Catechism for First Holy Communion




இப்போது விற்பனையில்




## சிறார்களின் உறுதிப்பூசுதலுக்கான மறைக்கல்வி

Catechism for Sacrament of Confirmation

---




இப்போது விற்பனையில்

## ஞாயிறு மறைக்கல்வி பாடநூல்கள்

Sunday Catechism Textbooks

(Cycle A, B and C)
(Available in Tamil and English)

| வகுப்புகள் | For Classes : |
|---|---|
| 1 முதல் 3 வரை | 1 - 3 |
| 4 முதல் 6 வரை | 4 - 6 |
| 7 முதல் 9 வரை | 7 - 9 |
| 10 முதல் 12 வரை | 10 - 12 |

+91 9385201453 Deepagam Don Bosco

# தீபகம்

தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம்

நடத்தும்

TO SHARE THE LIGHT

ஞாயிறு மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான

# ஒருநாள் பயிலரங்கம்



நாள் :

**ஜூன் 9 2024**

இடம் :

**தீபகம்**

கீழ்ப்பாக்கம்,
சென்னை.

நேரம் :

காலை 9 மணி முதல்
மாலை 4 வரை

அனைவரும் வருக! பலன் பெருக!!

மேலும் விபரங்களுக்கு :
+91 9385201453

அன்பு நண்பர்களே, **தீபகம்** மேற்கொள்ளும் அனைத்து இறைப்பணிக்காகவும் உங்கள் தாராள நன்கொடைகளை இந்த QR கோடை ஸ்கேன் செய்து இதன் மூலம் அனுப்பி வைக்க அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.
இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

01380530000007612@SIBL0000138
SISS A/C DEEPAGAM
THE CITADEL, 45, Landons Road
Kilpauk, Chennai - 600010

www.upiqrcode.com

www.upiqrcode.com
www.upiqrcode.com
www.upiqrcode.com

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**தீபகம்**, 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.

+91 9385201453 Deepagam Don Bosco

தயாரிப்பு : DEEPACT (Deepagam Proclamation And Cultural Team)
கணினியேற்றம் : கபிரியேல் மேரி அட்டைப்பட வடிவமைப்பு : ஜான் அலெக்சாண்டர் - DEEPACT
தயாரிப்பில் மேற்பார்வை : சாண்டோ, ஈசாக் அச்சிட்டோர் : சிகா அச்சகம், கீழ்ப்பாக்கம், சென்னை - 10